விலை: 30.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 089 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 04 வெள்ளிக்கிழமை (18.03.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

EDUS
Learning made lovable
சிறந்த ஒன்லைன்
கல்விக்கான நிரந்தர தீர்வு...!
தரம் 1 - G.C.E A/L வரை
Professional Courses for Beginners
(10684)
www.edus.lk | 0777 123 330

அராலி வடக்கில்

## பால் புரைக்கேறியதில் 8 மாத குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)
தாய்ப்பால் புரைக்கேறியதில் 8 மாத குழந்தை ஒன்று மரண மடைந்துள்ளது.
இச்சம்பவம் அராலி வடக்கில் நேற்று இடம்பெற்றுள்ளது.
இதில் அதே பகுதி யைச் சேர்ந்த யோக 15

## முன்னாயத்தம் செய்தே பேச்சுக்கு செல்கின்றோம்

### ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் இரா.சம்பந்தன்



(கொழும்பு)
அரசியல் தீர்வு விடயத்தில் ஜனாதிபதியுடன் மட்டுமல்ல சகல தரப்புடனும் எந்த நேரத் திலும்பேச்சுவார்த்தை நடத்த நாம் தயாரா 15

## யானை தாக்கியதில் குடும்பப் பெண் பலி

### மன்னார் அடம்பனில் சம்பவம்

(மன்னார்)
மன்னாரில் யானை தாக்கி யதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இதில் மன்னார் அடம்பன் முருகன் 15

## மகிந்த நாளை யாழ்.விஜயம்

(யாழ்ப்பாணம்)
பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நாளை 19ஆம் திகதி யாழ்ப் பாணத்திற்கு விஜயம் செய்ய வுள்ளார்.
இதன்போது யாழில் அமைக்கப்பட்டுள்ள 15

ஜனாதிபதியை விமர்சித்த

## ரூபவாஹினி தொகுப்பாளினி உடனடியாக பணி நீக்கம்



(கொழும்பு)
சமூக ஊடகத்தில் ஜனாதிபதியை விமர் சித்து பதிவிட்டதால், பெண் தொகுப்பாளினி ஒருவரை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் இடைநிறுத்தியுள் 15

# அரசின் செல்வாக்கு முற்றாகச் சரிவு


## புலனாய்வு அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு

(கொழும்பு)
நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரத்தின்படி அரசின் செல்வாக்கு முற்றாகச் சரிந்துள்ளதாக புலனாய்வு அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக் கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த அறிக்கையானது அரசுக்கு அவ்வளவு நல்லதாக இல்லை என்றே கூறப் பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)

## எமது ஆட்சியை கவிழ்க்க முடியாது

பிரதமர் மகிந்த 7 ஆம் பக்கம் பார்க்க



## தலைவர் பிரபாகரன் இருந்திருந்தால் நாடு பாதாளத்துக்கு சென்றிருக்காது

3 ஆம் பக்கம் பார்க்க

## ஒரு பில்லியன் கடன்

### இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்து



(புதுடில்லி)
பொருளாதார நெருக் கடியிலிருந்து மீள் வதற்கு போராடிவரும் இலங்கை அரசாங்கம், இந்தியாவிட மிருந்து ஒரு 15

## மொழிகளை தெரிந்து வைத்திருப்பது பல பிரச்சினைகளைத் தீர்க்கும்

### நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்



(யாழ்ப்பாணம்)
மொழிகளைத் தெரிந்து வைத் திருப்பது பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவிகரமாக அமையும் என பாராளுமன்ற உறுப்பினரும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். 15

முல்லைத்தீவில்

## எரிவாயு அடுப்பு வெடித்தது

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட வள்ளுவர்புரம் பகுதி யில் எரிவாயு அடுப்பு ஒன்று நேற்று காலை 15

## வாக்களித்த பொதுமக்களை அரசு வீதியில் நிறுத்தியுள்ளது

### ஜே.வி.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)
சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்குவதாக வாக்குறுதி யளித்து வாக்குகளைப் பெற்ற அரசாங்கத்தின், தொலைநோக் கற்ற நடவடிக்கையால் அத்தியா வசியப் பொருட்களுக்காக பொது மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய அவல 16

இன்று முதல்

## எரிவாயு விநியோகம்

### லிட்ரோ நிறுவனம்

(கொழும்பு)
3500 மெட்ரிக் டொன் எரிவாயுவை 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலையில் விபத்து; குடும்பப் பெண் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சியின் மீசாலைப் பகுதியில் விபத்தில் சிக்கிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த மூன்று பிள்ளைகளின் தாய் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த 15ஆம் திகதி பிற்பகல் 2 மணியளவில் மீசாலை ஐயா கடையடிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த பெண் மீது முச்சக்கரவண்டி மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்து காணப்பட்ட அவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பிள்ளைகளை பாடசாலையிலிருந்து அழைத்து வரச்சென்றபோதே அவர் விபத்தில் சிக்கியுள்ளார்.

இதில் மீசாலை வடக்கினைச் சேர்ந்த சிறீதரன் செல்வராணி (வயது-52) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

விபத்தை ஏற்படுத்திய முச்சக்கரவண்டி தப்பிச் சென்றுள்ள நிலையில் முச்சக்கரவண்டி குறித்த தகவல் தருமாறு பொலிஸார் பொது மக்களிடம் கோரிக்கைவிடுத்துள்ளனர். (ம-30)

## +301

கொரோனா தொற்று உறுதியான மேலும் 301 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 657435ஆக அதிகரித்துள்ளது. (ம)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2021 ஐந்தாம் தரம்
புலமைப்பரிசில் பரீட்சையில்
169 புள்ளிகளைப் பெற்று எமது கல்வி நிலையத்திற்கு பெருமை சேர்த்த
யா / புனித தெரேசாள் மகளிர் கல்லூரி
மாணவன்

**இராசேந்திரம் வைசாலிகன்**

அவர்களை எமது கல்வி நிலையம் சார்பாக மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாணி கல்வி நிலையம்**
துரையையா அவனியூ,
சந்நிதி வீதி, அச்சுவேலி.
(10667)

## அறை வாடகைக்கு

கல்வி கற்கும், வேலை செய்யும் பெண்களுக்கு மட்டும்.
இல.196, Main street, Jaffna.
076 111 9901
(10679)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கிளி / மத்திய கல்லூரி
மாணவி

**மு. ஷயுகா**



2021 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 182 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் 3 ஆம் இடத்தினையும் மாவட்ட மட்டத்தில் 7 ஆம் இடத்தினையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல சாதனைகளை புரிய இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்
மாமா குடும்பத்தினர்
(கிருபா - சங்கானை)
(10678)


சிவமயம்



**யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை**

## அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின்

ஈஷான பாகத்தில் அமைந்துள்ள சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்க வாயில் சந்நிதானம்
அடியவர்கள் அபிஷேக லிங்கேஸ்வர பெருமான் பிரதிஷ்டையும் பங்குனி உத்தர தீ மிதிப்பு பெருவிழாவும்

**18.03.2022 வெள்ளிக்கிழமை**

- 18.03.2022 வெள்ளிக்கிழமை தீ மிதிப்பு பெருவிழா
- காலை 8.00 மணிக்கு தெய்வீக பஜனையும் தீ மூட்டலும்
- மாலை 3.00 மணிக்கு உடுக்கை ஒலி சமர்ப்பணம்
- மாலை 6.00 மணிக்கு வசந்தமண்டப பூஜை
- மாலை 6.30 மணிக்கு மஹா தீ மிதிப்பு பெருவிழா

**பிரதிஷ்டா பிரதம சிவார்ச்சார்யார்**

கிரிஜா போதக அநுபூதி, சக்தி கிரியா வியாசர், சமாஸ்ரீ தேசாமான்ஜ, சிவார்ச்சார்ய இளவரசு

**இராஜஸ்ரீ சிவ கமல்ராஜ் குருக்கள்**

முதன்மை குரு முதல்வரும் பரம்பரை முகாமை தர்மகர்த்தாவும்
வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்
நல்லையம்பதி சிங்கார வேலவன் சிவகாயத்திரி சந்நிதானம்

**பிரதிஷ்டை உபயம்**

**ஸ்ரீமதி சிங்கார வேல் ஐயா சிவபாக்கியம் அம்மா** (கனடா)
**இராஜதிரு. சிவ அருள் பிரகாஸ் ஐயா** (ரமேஸ் ஐயா)
கனடா வாழ் வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்
நல்லையம்பதி சிங்கார வேலவன் சிவகாயத்திரி
சந்நிதான பரம்பரை முகாமை ஆதீன கர்த்தா

**குறிப்பு**

இன்று 18 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
நடைபெறுகின்ற கிரியா பூர்வமான வழிபாடுகளில் கலந்து கொண்டு வீரமாகாளி தாயாரினதும் ருத்ர லிங்கேஸ்வர பெருமாளினதும் சிவகாயத்திரி தாயாரினதும் திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

தெய்வே எம் சிந்தனை
சர்வமங்களம் உண்டாகட்டும்.
(C-3993)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி கௌரி மகேந்திரராஜா
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நடராஜா இராசமணி**



அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி
(10654)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா தர்மலிங்கம்



இல.411, திருநகர் தெற்கு,
கிளிநொச்சி.

மலர்வு: 09.11.1942 உதிர்வு 17.03.2022

இல.411, திருநகர் தெற்கு, கிளிநொச்சியைச் சேர்ந்த திருமதி கனகம்மா தர்மலிங்கம் அவர்கள் நேற்று *(17.03.2022)* வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(18.03.2022)* வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: Dr. தர்மலிங்கம் (குடும்பத்தினர்)
(அன்பு மெடிக்கல், கிளிநொச்சி) 070 332 0986
(10681)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரபாகரன் இருந்திருந்தால் நாடு அதல பாதாளத்திற்கு சென்றிருக்காது

## மனம் திறந்தார் முன்னாள் இராணுவ சிப்பாய்

**(கொழும்பு)**

**விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இருந்திருந்தால் அவர்களிடம் கடன் வாங்கி இந்த நாட்டை பாதுகாத்திருக்கலாம் என முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.**





அவர் மேலும் தெரிவிக்கையில், நான் இராணுவ சேவையில் இருந்தவன். இந்த நாட்டில் ஒரு பகுதியை கேட்ட பிரபாகரன் அவர்களுடன் 20 வருடம் யுத்த செய்தோம் என்ன நடந்தது தற்போது எங்களுடைய உரிமை விற்கப்பட்டு விட்டது. அந்த மனிதரிடம் வடக்கு, கிழக்கை கொடுத்திருந்தால் அவர்களிடம் நாம் கடன் வாங்கி இந்த நாட்டை பாதுகாத்திருக்கலாம். என அவர் தெரிவித்த வீடியோ பதிவு சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. (நி-5)

## 25 நாட்களுக்கு தேவையான எரிபொருள் 10 நாட்களில் நாட்டிற்கு கிடைக்கும்

### பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

(கொழும்பு)

25 நாட்களுக்கு தேவையான எரிபொருள் எதிர்வரும் 10 நாட்களில் நாட்டிற்கு கிடைக்கப்பெறும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

114,000 மெட்ரிக் தொன் டீசலும் 60,000 மெட்ரிக் தொன் பெற்றோலும் இரண்டு வாரங்களில் கிடைக்கப்பெறும் என கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய டீசல் கப்பல் ஒன்று எதிர்வரும் 21 அல்லது 22 ஆம் திகதியில் நாட்டை வந்தடையவுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு செல்பவர்கள் முன்னர் தாம் பெற்றுக்கொண்ட அளவினை காட்டிலும் தற்போது அதிகளவில் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதே எரிபொருள் பற்றாக்குறைக்கு காரணம் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## பொலித்தீன் உற்பத்திகள் 40 சதவீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

பொலித்தீன் சார்ந்த உற்பத்திகளின் விலைகள் 40 சதவீதத்தினால் அதிகரித்துள்ளன.

அகில இலங்கை பொலித்தீன் உற்பத்தியாளர்கள் மற்றும் மீன் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அநுர விஜேதுங்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

டொலர் பற்றாக்குறை காரணமாக மூலப்பொருட்களின் விலை வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் இதன் காரணமாக பொலித்தீன் சார்ந்த உற்பத்திகளின் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் அரிசியை பொதியிடப் பயன்படுத்தும் பை ஒன்றின் விலையை 35 ரூபாவால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரிசி பை உற்பத்தியார்கள் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## எரிபொருளுக்கான கடன் தொகையை அதிகரிக்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

எரிபொருள் கடன் தொகையை அதிகரிக்குமாறு இந்தியாவிடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கமைய எரிபொருள் கொள்வனவுக்காக வழங்கப்படும் கடனை 500 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 750 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்குமாறு இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

## ரயிலில் பயணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

ரயிலில் பயணிப்பவர்களின் எண்ணிக்கை 40 வீதத்தினால் அதிகரித்துள்ளது என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலை அதிகரிப்புடன் பேருந்து கட்டணம் அதிகரித்துள்ள நிலையிலேயே, ரயிலில் பயணிப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதன்காரணமாக பயணிகளின் கோரிக்கைக்கு ஏற்ற வசதியான சேவையை வழங்குவதற்கு உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-5)

## இறக்குமதியாகும் பழங்களுக்கு விசேட வரி அறிவிப்பு

(கொழும்பு)

இறக்குமதியாகும் பல நூற்றுக்கணக்கான பொருட்களுக்கு கட்டுப்பாடு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அப்பிள், ஒரேஞ், திராட்சை, மாதுளை உட்பட பொருட்களுக்கு விசேட வரி அறிவிப்பு வெளியாகியுள்ளது.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ குறித்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்த வரி அதிகரிப்பு அடுத்த 6 மாதங்களுக்கு அமுலில் இருக்கும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.



திராட்சை, அப்பிள், கிலோ வொன்றுக்கான பண்ட வரி 300 ரூபாவாகவும், தோடம்பழம், பேரீச்சம்பழம் கிலோ வொன்றுக்கான வரி 200 ரூபாவாகவும் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தயிர், சீஸ் ஆகியவற்றுக்கும் இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## தொடரூந்திலிருந்து தவறி வீழ்ந்து வெளிநாட்டு சுற்றுலா பயணி பலி

(பதுளை)

கொழும்பில் இருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட்ட மெணிக்கே தொடரூந்திலிருந்து தவறி வீழ்ந்து வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் உயிரிழந்துள்ளார்.


குறித்த தொடரூந்தில் பயணித்த மேற்படி சுற்றுலா பயணி பட்டிப்பொல தொடரூந்து நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் பிற்பகல் தவறி கீழே வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் நுவரெலியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

உயிரிழந்தவர் மேலதிக சிகிச்சைக்காக வேறு மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் அவர் உயிரிழந்தார். மொஹமட் அப்துல்ஹமீட் என்ற எகிப்து நாட்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

ஒரு வாரத்திற்கு முன்னர் இலங்கை வந்த அவர் எல்ல நோக்கி தொடரூந்தில் பயணித்துக் கொண்டிருந்த போது பட்டிப்பொல தொடரூந்து நிலையத்துக்கு அருகில் மிதிபலகையிலிருந்து தவறி வீழ்ந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
27 - 06 - 1956

மறைவு
16 - 03 - 2022

## இராசையா புலேந்திரன்

**( ஓய்வுபெற்ற கிராம சேவகர், அகில இலங்கை சமாதான நீதவான் )**

குடத்தனை வடக்கைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா புலேந்திரன் அவர்கள் நேற்று முன்தினம் (16.03.2022) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - நேசம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் தேவராணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் முரளிதரன் (பொறியியலாளர் -லண்டன்), கிரிதரன் (நெதர்லாந்து), விஜிதரன் (பொறியியலாளர்), கிருபாதரன் (நோர்வே), தயாபரன் (மருத்துவபீடம் - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரோசினி (லண்டன்), அனித்தா (நெதர்லாந்து), சிவானுஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுசன், கைலன், கபிஷன், அஜய், டெவின், கனிஷா ஆகியோரின் அன்பு பேரனும் இந்திராணி, நேசராணி (நோர்வே), புஸ்பராணி (நியூசிலாந்து), ஜெயராணி (நெதர்லாந்து) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.03.2022) வெள்ளிக் கிழமை காலை 8 மணியளவில் நாகலிங்கம் முதலியார் வீதி, பருத்தித்துறையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குடத்தனை வடக்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**074 230 6549** (C-3994) **தகவல் : குடும்பத்தினர்**

# மெய்வல்லுநர் போட்டிகள் யாழில் நேற்று ஆரம்பம்





யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவினருக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று ஆரம்பமாகி மிக கோலாகலமாக நடைபெற்று வருகின்றது.

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் தலை வரும், யாழ்.மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருமான விஜிதரன் தலைமையில் நடைபெற்று வரும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஐக்கிய அமெரிக்கா ஹெற்ஸ் மூ புறப்பட்டி லிமிரெட் முகாமைத்துவ பணிப்பாளர் ஜெயரட்ணம் ஜெயகாந்தன், சிறப்பு விருந்தினர்களாக அபிவிருத்தி லொத்தர் சபை தலைவர் அஜித் நாரகல, முன்னாள் விளையாட்டு பணிப்பாளர் கே.டபிள்யூ. விமலராஜன், எல்.என்.ஆர்.குறூப் பணிப்பாளர் யோகராஜா. ராஜ்மோகன், என்.டி.பி.வங்கி முகாமையாளர் ஸ்கந்தபாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் தமிழ் வாத்திய கருவிகளுடன் விருந்தினர்கள் வரவேற்று, மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் தலைவர் விஜிதரனால் யாழ்.மாவட்ட மெய்வல்லுநர் சங்கத்தின் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

கோலூன்றிப்பாய்தல் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் ஆசிய மட்ட போட்டியின் இறுதிச் சுற்றில் 5.10 மீற்றர் பாய்ந்தும், தேசிய மட்ட போட்டியில் 5 மீற்றர் உயரம் பாய்ந்தும் தங்க பதக்கத்தை சுவீகரித்த புவிதரன் மற்றும் டெக்காத்தலன் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை கைப்பற்றிய ஆர். சதீசன் ஆகியோரால் ஒலிம்பிக் தீபம் ஏற்றி வைக்கப்பட்டது.



தொடர்ந்து வீரர்களின் சத்தியப் பிரமாணத்தை தொடர்ந்து, யாழ். மாவட்ட மெய்வல்லுநர் நடுவர் சங்கத்தின் சிரேஷ்ட நடுவர் எம்.சசிக்குமாரின் சத்தியப்பிரமாணத்தை தொடர்ந்து பிரதம விருந்தினரால் வைபவ ரீதியாக போட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன நாளை சனிக்கிழமையும் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (4-6-90)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2537

### நிந்துஜா



அருகில் இல்லை என்றாலும், தன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் அளவிற்கு தந்திருக்கிறார் அப்பா......

### அபிசன்

50 கிலோவைக்கூட சாதாரணமாக தூக்கும் ஆண்களுக்கு..



தன் கைக்குழந்தையைத் தூக்கும் பொழுது வரும் பயத்திற்கு ஈடு இணையே இல்லை...

### நிருஷா

குடும்ப பிரச்சினைகளுக்குக் காரணம்.... ரெண்டே ரெண்டு தான் பேசிப்பேசியே பிரச்சினையைப் பெரிசா ஆக்கிறது...



ஒருத்தருக்கொருத்தர் பேசாமலே இருந்து... பிரச்சினையைப் பெரிசா ஆக்கிறது...

### ஆரங்கன்




நல்லா இருக்கீங்களா மாமி..




என்னது மாமியா...... டேய் குமாரு நான் உன்கூட படிச்ச அனிதாடா அபிஷ்டு

### திவ்யா

வாழ்கைல ஏதோ மிஸ் ஆகுதேனு நினைச்சா...



மதிய சாப்பாடு இன்னும் சாப்பிடல... சோறு தானே முக்கியம்..

### லிதுர்சன்

ஒரு வேளை மூன்றாம் உலகப்போர் வந்திட்டிச்சுன்னா



அதுவும் நல்லது தான், பெற்றோல், கரண்ட், Gasன்னு எதுவும் தேவையில்லை எந்த பிரச்சினையும் இல்லாம நிம்மதியா போய்ச்சேரலாம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவற்றை www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடு வீதியில் இலங்கை பொலிஸாருக்கு இப்படி ஒரு நிலையா?

(கொழும்பு)

நாட்டில் அத்தியாவசிய பொருட்கள் உட்பட பல்வேறு பொருட்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. நாட்டில் ஏற்பட்டுள்ள டொலர் தட்டுப்பாட்டினால் இலங்கை அரசாங்கம் பல்வேறு நாடுகளிலும் கடனுதவி கோரியுள்ளது.

இலங்கை மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிவாயுவுக்காகவும் நீண்ட வரிசையில் நெடுநேரமாக காத்திருக்கும் அவல நிலை தோன்றியுள்ளது.



இந்நிலையில் இலங்கை போக்குவரத்து பொலிஸார், எரிபொருள் இன்மையால் தமது மோட்டார் சைக்கிளை வீதியில் தள்ளிச்செல்லும் புகைப்படம் சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது. (நி)


## நன்றி நவில்கின்றோம்

கடந்த (17.02.2022) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர். செல்லையா பூலோகநாயகி



அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது எமக்கு நேரிலும் தொலைபேசி மூலமாகவும், சமூக வலைத்தளங்கள் மூலமாகவும், ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும், மலர் வளையங்கள் அனுப்பி வைத்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை தயாரித்து அனுப்பியவர்களுக்கும் மற்றும் எம்முடன் தோளோடு தோள் நின்று சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய தொண்டர்கள், அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் எமது நன்றி அறிதலை தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு– 19.03.2022 நாளை சனிக்கிழமை நண்பகல் 12.00 மணி முதல் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன உபசார நிகழ்வில் கலந்து சிறப்பித்து அன்னாரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்தனை செய்யுமாறு வேண்டிக் கொள்கின்றோம். இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சிவநகர், ஒட்டுசுட்டான். குடும்பத்தினர்.


# நாடு இருக்கும் நிலைமையை சரியாகக் கூறுங்கள்

## ஞானசார தேரர் சீற்றம்

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஆங்காங்கே மக்கள் ஆர்ப்பாட்டங்களை செய்ய ஆரம்பித்துள்ளனர். இப்படியான ஆர்ப்பாட்டங்களை நடத்தும் போது நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது. ஜனாதிபதியிடம் இப்படியான ஆட்சி நிர்வாகத்தை நாம் எதிர்பார்த்து இருக்கவில்லை எனவும் கல கொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். "ரயில்வே, மருத்துவமனைகளில் பணிப்புறக்கணிப்புகளை செய்ய இடமளிக்க முடியாது.

இவற்றுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதற்காகவே மக்கள் நிறைவேற்று அதிகாரத்தையும் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தையும் வழங்கினர்.

கோட்டாபய ராஜபக்ஷவிடம் இப்படியான ஆட்சி நிர்வாகத்தை எதிர்பார்க்கவில்லை. அரசாங்கம் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை வரிசையில் நின்று எரிபொருளை நிரப்பி கொள்கின்றனர்.

எரிபொருள், எரிவாயு போன்று இரசாயன பசளை கப்பலில் வரும் வரை காத்திருந்திருக்க வேண்டும்.

முன்கூட்டியே நாம் சேதனப் பசளை பயிர் செய்கைக்கு சென்றுள்ளோம். குறைபாடுகளுடன் கூட அதனை செய்ய முடிந்தால், நல்லது. மக்கள் மத்தியில் சென்று சரியாக புரியவைக்க கூடிய எவரும் இல்லை. நாடு எந்த நிலைமையில் இருக்கின்றது என்பதை சரியாக கூறுங்கள்" எனவும் ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். (நி)

# இராசிபலன்

18.03.2022
பங்குனி 04, வெள்ளிக்கிழமை
பூரணை பிற்பகல் 1.47 மணிவரை
உத்தரம் பின்னிரவு 1.23 மணிவரை
சுபநேரம்- 6.19-7.49 மணிவரை
இராகுகாலம் -10.49-12.19 மணிவரை
பங்குனிஉத்தரம்,சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம்
அவிட்டம், சதயம்

**வளவன்**

**மேஷம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம்,எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு.

**ரிஷபம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் நலனில் அக்கறை கூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மிதுனம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர்.

**கடகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்,எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும்நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், காரிய அனுகூல முண்டு.

**கன்னி** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்,வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**துலாம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு** தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும்,நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன நன்மையுண்டு.

**மகரம்** வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொழில் வளர்ச்சி சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தேக நலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், களஸ்திர நன்மையுண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூல முண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிவில்லாத அழகு பாராட்டுப் பெறாது.

# இக்கட்டான காலகட்டத்திலும்

# தமிழினம் வஞ்சிக்கப்படுகிறது

## சிறீதரன் எம்.பி ஆதங்கம்

(கிளிநொச்சி)

**எம் இனத்தின் இருப்பு கேள்விக்கு உட்படுத்தப்படுகிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**



தமிழரசுக் கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் பூநகரியில் இடம்பெற்றது குறித்த சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சர்வதேச நாணய நிதியத்திடம் போகமாட்டோம் என்று மார்தட்டியவர்கள் இன்று சர்வதேச நாணய நிதியத்தின் காலடியில் வீழ்ந்து இருக்கிறார்கள்.

இலங்கையில் மக்கள் இன்று எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் வரிசையில் நிற்கிறார்கள் எரிவாயுவிற்காக வரிசையில் நிற்கிறார்கள் அத்தியாவசிய பொருட்களை வரிசையில் நின்று தான் வாங்க வேண்டும் என்கிற நிலை இப்போது உருவாகியிருக்கிறது. பொருளாதார நிலை அதல பாதாளத்திற்கு சென்றுள்ளது.

இப்படி இக்கட்டான நேரத்திலும் எம் இனத்தின் வாழ்க்கை என்பது அழிக்கப்பட்டுக் கொண்டே செல்கிறது எங்களை நோக்கி புத்த கோவில்கள் வருகிறது எங்கள் இடங்களில் கொரோனாக் காலங்களில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு மற்றும் பயணத்தடைகளின் போது முளைத்த இராணுவ சோதனைச் சாவடிகள் நிரந்தரமாக்கப்பட்டுள்ளன.

வனவளத்திணைக்களம் வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களம் போன்றன தமிழர்களின் நிலங்களை பறித்து விவசாயம் செய்வதற்கு தடையாக இருக்கிறன. முழுமையாக ஒரு இராணுவ மயப்படுத்தப்பட்ட இராணுவ நியமங்களினால் தான் நாடு இன்று இவ்வாறான அழிவைச் சந்தித்துள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

## தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய கோபுர கலசம் வைக்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

வரலாற்று சிறப்பு மிக்க தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவாசல் இராஜ கோபுர கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கலசம் ஸ்தாபிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணியளவில் இடம் பெறவுள்ளது. 87 அடி உயரம் கொண்ட இவ் தலைவாசல் கோபுரத்தின் ஆறு அடி உயரம் கொண்ட 9 கலசங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி தலைவாசற் கோபுர கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளதுடன் துர்க்கை அம்மனுக்கு ஏற்கனவே நான்கு திசைகளிலும் நான்கு கோபுரம் அமையப்பெற்றுள்ளதுடன் இக்கோபுரம் பஞ்ச கோபுரமாக விளங்குகின்றது.

கடந்த வருடம் பங்குனி மாதம் தலைவாசல் கோபுர நிர்மானப் பணிகள் ஆரம்பமாகிய நிலையில் சுமார் ஒரு வருடத்தில் குறித்த பணி நிறைவுற்று அம்பாள் கும்பாபிஷேகம் காண்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (5)



தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் மானியத்திட்டங்களை மேற்கொண்ட தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கான மானியக் காசோலை வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. கரவெட்டி, புலோலி மற்றும் அம்பன் ஆகிய கமநல சேவை பிரிவுகளில் தென்னைப் பயிர்ச் செய்கையினை மேற்கொள்ளும் 115 பயனாளிகளுக்கு நேற்றுமுன்தினம் குறித்த கமநல சேவை நிலையங்களில் வைத்து மானியங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம் : மகாலிங்கம், சிவசாந்தன், கஜிந்தன்)

## வாள் முனையில் மிரட்டி நகை, பணம் கொள்ளை

### சுழிபுரத்தில் சம்பவம்

(அராலி)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் - பறளாய் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் இரவு நகையும் பணமும் களவாடப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறித்த வீட்டிற்குள் அத்துமீறி உள்நுழைந்த இருவர் வீட்டில் உள்ளவர்களின் கழுத்தில் வாளினை வைத்து மிரட்டி ஒரு பவுண் சங்கிலி, அரைப்பவுண் தோடு, அரைப்பவுண் மோதிரம் மற்றும் 25 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றினை கொள்ளையடித்து சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-5-104)

## வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் கடந்த காலங்களில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தந்தையும் மகனும் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் கடந்த காலங்களில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வந்த நிலையில் நேற்று முன்தினம் புதன் கிழமை மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், அவரது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள் ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

வீட்டில் இருந்து வாள் மீட்கப்பட்ட சம்பவத்தினை அடுத்து வீட்டின் உரிமையாளர் என்ற அடிப்படையில், இளைஞனின் தந்தையையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-33)

## மாணிக்கவிழாவும் பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 40 ஆவது ஆண்டு மாணிக்க விழாவும், வருடாந்த பொதுக் கூட்டமும் நாளை மறுதினம் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது என புனர்வாழ்வு நிறுவன தலைவர் அறிவித்துள்ளார். (4-5)

## சாரதியை தாக்கியவருக்கு விளக்கமறியல்

(கரணவாய்)

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பேருந்தின் சாரதியை தாக்கியவரை எதிர்வரும் 28 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் மேலும் சில சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். (4-5-60)







டேவிட் பீரிஸ் குடும்பத்தின் பஜாஜ் வாகனங்களுக்கான WORKSHOP மற்றும் பஜாஜ் அசல் உதிரி பாகங்கள் விற்பனை நிலையம் நேற்று முன்தினம் இல, 405 பிறவுண் வீதி யாழ்.கொக்குவிலில் திறந்து வைக்கப்பட்டது. (படங்கள் : சிவசொந்தன், ரவிசாந்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யா/கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபராக கடமையாற்றி 18.03.2022
இன்றுடன் ஓய்வுபெறும் திரு அல்போன்ஸ் அன்ரனி வின்சன் மரியநாயகம் அவர்களது

# சேவை நலன் பாராட்டு- வாழ்த்து

**சேவை விபரம்**

யா/நாகர்கோவில் மகாவித்தியாலயம்- வர்த்தக பட்டதாரி ஆசிரியர்
-(1993.01.12-1994.02.27)
மருதங்கேணி கோட்டக்கல்வி அலுவலகம்- திட்டமிடல் உதவியாளர்
(1994.02.28-1998.12.31)
வடமராட்சி வலயக்கல்வி அலுவலகம்- திட்டமிடல் உதவியாளர்
(1999.01.01-2001.01.09)
யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை- ஆசிரியர்.
(2001.01.10- 2009.06.30)
வடமராட்சி வலயக் கல்வி அலுவலகம்-சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்
(2009.07.01-2012.07.01)
யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை-பதில் அதிபர்
(2012.07.02-2012.10.04)
யா/கலட்டி றோ.க.த.க.பாடசாலை- அதிபர்
(2012.10.05-2022.03.18)

(C-3990)




கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன்
பாடசாலையில் முளைத்த விதையே...
விளை நிலத்தை காக்கவந்த பெருவிருட்சமே...
அன்பாலும் அடக்கத்தாலும் எமை வழிப்படுத்திய
வாண்மையாளரே...
மென்போக்கு நிர்வாகத்தின் சூட்சுமத்தைப் புரிந்த
தலைமையே....
மாணவர்கள் இதயத்தில் அன்பான தந்தையே
ஆசிரியர்கள் மனங்களில் நீங்காத நட்பே...
கல்விசாரா ஊழியர்களின் கனிவான வழிகாட்டியே....
உங்கள் ஓய்வுக்காலம் சிறக்க,
உடல், உள, சமூக , ஆன்மிக ஆரோக்கியத்தோடு
உங்கள் குடும்பம் எனும் விருட்சத்தில் சிறப்பாக வாழ்த்திடவே
வாழ்த்தி வழியனுப்புகின்றோம்.

**திரு.அல்போன்ஸ் அன்ரனி வின்சன் மரியநாயகம்**
SLPSI,B.B.A (HONS),PGDE,MED,PGDEM (Merit)

**ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள்.**
**யா/கலட்டி றோ.க.த.க. பாடசாலை பருத்தித்துறை.**

## ஆட்சியைக் கவிழ்க்க முடியாது

# பிரதமர் நம்பிக்கை

(கொழும்பு)

**“சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிரணியினர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் செய்வதால் எமது ஆட்சியைக் கவிழ்க்கவே முடியாது” என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்.**



ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் அரசுக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் முன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“எமது ஆட்சியைக் கவிழ்க்க எதிரணியினர் படாதபாடுபடுகின்றனர். அவர்கள், தமது ஆதரவாளர்களை பேருந்துகளில் ஏற்றி வந்து ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட வைத்துள்ளனர். இதனால் என்ன பயனை அவர்கள் அடைந்தார்கள்?

எதிரணியினர், ஜனாதிபதியின் செயலகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் செய்வதால் எமது ஆட்சியைக் கவிழ்க்கவே முடியாது. ஏனெனில், 69 இலட்சம் மக்களின் ஆணையுடனேயே இந்த ஆட்சி அமைக்கப்பட்டது. இதை எதிரணியினர் கவனத்தில்கொள்ள வேண்டும்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு எமது அரசு காரணம் அல்ல. தற்போதைய எதிரணியினர் தான். கடந்த ஆட்சியில் நல்லாட்சி என்ற பெயரில் நாட்டைச் சீரழித்தனர். அதன் விளைவுகளை இன்று அனைவரும் அனுபவிக்கின்றோம். இதை எமக்கு ஆணை வழங்கிய மக்கள் புரிந்துகொள்வார்கள்.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு விரைவில் தீர்வு காணப்படும். ஜனாதிபதி இதில் உறுதியாகவுள்ளார்” என அவர் தெரிவித்தார். (நி)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-21 அராலி வீதி ஆதன இல.50/31 என்ற ஆதன இலக்கத்தை கொண்ட ஆதனம் எமது பதிவேட்டில் சொந்தக்காரர் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 2998ம் இலக்க 05.05.2005 ஆம் திகதியிட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் முகமட் யூசுப் சமீன் என்பவர் இவ்வாதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த முகமட் யூசுப் சமீன் பிரசித்த நொத்தாரிசு யோகநாதன் சத்தியநாதன் முகதாவில் வழங்கப்பட்ட 1269ம் இலக்க 08/03/2006 ஆம் திகதியிட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை முத்துலிங்கம் இரவீந்திரன் பெண் செல்வதிக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவில்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை “பாம்படி மயிலன் புங்கடி” உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆ.நவரட்ணம் 20.05.1989 ஆம் திகதியில் அளந்த 7 துண்டுகளாக பிரிவிட்டு வரைந்த 1207 இலக்கப்படத்தின்படி நெற்.பர.62 குளி 0.02 இதில் துண்டு “ 1 ” எனச் சுட்டப்பட்ட பாகம் நெற்.பர.14 குளி 11.40 இதில் கிழக்கு பக்கமாக நெற்.பர.08 குளி 06 இனை உத்தரவு பெற்ற அளவையாளர் பி.தனராஜா 30.04.2005 ஆம் திகதியில் அளந்து 06 துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு வரைந்த 2743ம் இலக்கப்படத்தின் படியும் விஸ்தீரணம் நெற்.பர.8 குளி 6 இல் குறித்த 2743ம் இலக்கப் படத்தின் படி துண்டு 4 எனச்சுட்டப்பட்ட பாகம் நெற்.பர (2) இரண்டும் அதற்குரியவைகளும் இதன் எல்லை.

கிழக்கு :- 12 அடி அகலமான ஒழுங்கை

வடக்கு :- குறித்த 2743ம் இலக்க படத்தில் துண்டு 3 எனச்சுட்டப்பட்டதும் சீனி முகமது அபூகாதிர் என்பவரது ஆதனம்.

மேற்கு :- இதன் மிகுதியான ஆதனம்.

தெற்கு :- குறித்த 2743ம் இலக்கப்படத்தின் துண்டு 5 எனச் சுட்டப்பட்ட பாகம் இவ் எல்லைகளும் இதடாங்கலும்.

தற்போது முத்துலிங்கம் இரவீந்திரன் பெண் செல்வதி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இரவீந்திரன் பெண் செல்வதி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-3983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## விட்டுக் கொடுப்பிற்கு இடமில்லை

### உக்ரைன் ஜனாதிபதி உறுதி

(கீவ்)

அமெரிக்க பாராளுமன்றத்தின் விசேட அமர்வில் காணொளிக் காட்சி வாயிலாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி நேற்று முன்தினம் உரையாற்றினார்.

இதன்போது ரஷ்ய ஆக்கிரமிப்புப் போரை உறுதியுடன் தொடர்ந்து எதிர்கொள்வோம். விட்டுக்கொடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. அது குறித்து ஒரு நொடி கூட நாங்கள் சிந்திக்கவில்லை எனவும் அவர் உறுதியாகத் தெரிவித்தார்.



இரண்டாம் உலகப் போருக்குப் பின்னான மோசமான போரை உக்ரைன். எதிர்கொண்டு வருகிறது. கடந்த 8 ஆண்டுகளாக ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை நாங்கள் எதிர்கொண்டு வருகிறோம்.ரஷ்யா என்னுடைய நாட்டை மட்டும் தாக்கவில்லை. எங்களுடைய நன்மதிப்புகள் மீது மிருகத்தனமான தாக்குதலை நடத்தி இருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், உக்ரைன் வான்பரப்பை விமானங்கள் பறக்கத் தடை செய்யப்பட்ட பகுதியாக அறிவிக்குமாறு அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும், இந்த போரில் இதுவரையிலான அமெரிக்க ஆதரவுக்கு உக்ரைன் ஜனாதிபதி அமெரிக்காவுக்கு நன்றி தெரிவித்தார். இந்த போரில் உதவுவதுடன், துணை நிற்கும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடனின் தனிப்பட்ட ஈடுபாடு குறித்தும் ஜெலன்ஸ்கி சுட்டிக்காட்டினார்.

ஆனால், இது குறித்து அமெரிக்க பாராளுமன்றம் மேலும் பல விடயங்களை செய்ய வேண்டும். ரஷ்ய இராணுவம் தாக்குதலை நிறுத்தும் வரை அந்நாட்டிற்கு எதிராக பல தடைகளை விதிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

ரஷ்யாவில் உள்ள அனைத்து அரசியல்வாதிகளுக்கு எதிராகவும் தடை விதிக்க வேண்டும். ரஷ்ய சந்தையில் இருந்து அனைத்து அமெரிக்க நிறுவனங்களும் உடனடியாக வெளியேற வேண்டும் எனவும் அதில் எங்களின் ரத்தக்கறை படிந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## போ

## சர்வதே

**(அம்ஸ்ரர்டம்) — உக்ரைனில் மே உடனடியாக நிறுத்து உத்தரவிட்டுள்ளது.**

தங்கள் நாட்டில் ரஷ்யா இனப் படுகொலை நடத்தி வருவதாக குற்றஞ்சாட்டிய உக்ரைன், போரை உடனடியாக நிறுத்த உத்தரவிடக்கோரி சர்வதேச நீதிமன்றத்தில் முறையிட்டது.

இந்த விவகாரம் தொடர்பாக நெதர்லாந்தை தலைமையிடமாகக்

## கின்னஸில் இடம்பிடித்த உலகின் மிக நீளமான கார்

(வோஷிங்டன்)

கின்னஸ் சாதனை பட்டியலில் இடம் பிடித்தவர்களையும், சம்பவங்களையும் பார்த்தால் வியப்பாகவும் ஆச்சரியமாகவும் இருக்கும்.



அந்த வரிசையில், உலகின் மிக நீளமான கார் என்ற பெயரை பெற்றிருக்கிறது மியாமியைச் சேர்ந்த கார். 100 அடி நீளமுள்ள இந்த காரில், நீச்சல் குளம், ஹெலிகொப்டரை தரை இறக்க தேவைப்படும் ஹெலிபேட் எல்லாம் இருப்பது இதன் சிறப்பம்சம்.

1986 ஆம் ஆண்டு, உலகின் நீளமான கார் என்ற இடத்தில் கின்னஸ் உலக சாதனை புரிந்த இந்த மியாமி கார், தன்னுடைய ரெக்கார்டை முறியடித்து மீண்டும் கின்னஸ் சாதனையில் இடம் பிடித்திருக்கிறது. "தி அமெரிக்கன் ட்ரீம்" என பெயரிடப்பட்டிருக்கும் இந்த கார், முதன் முதலில் 60 அடி நீளத்தில் தயாரிக்கப்பட்டது. இப்போது 100 அடி நீளத்திற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. கடந்த மார்ச் முதலாம் திகதி கின்னஸ் அமைப்பால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கிட்டத்தட்ட 35 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதே இடத்தைப் பிடித்திருக்கிறது.

100 அடி நீளமான காரை 26 சக்கரங்கள் கொண்டு இயங்குகிறது. கிட்டத்தட்ட 75 பேர் பயணிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட வேலைப்பாடுகளின் முடிவில் இந்த கார் தயாராகி இருக்கிறது. (நி-5)

## வரலாற்றில் எந்த இந்தியா

### அமெரிக்கா எ



(வோஷிங்டன்)

வரலாற்றில் எந்தப் பக்கம் நிற்க வேண்டும் என்பதை இந்தியா முடிவு செய்ய வேண்டும் என வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜென்சாகி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர்

## உலக பணக்காரர்கள் பட்டியலில் முகேஷ் அம்பானி 9 ஆவது இடம்



(டில்லி)

ஹூருன் நிறுவனம் வெளியிட்ட உலகப் பணக்காரர்கள் பட்டியலில் முதல் 10 இடங்களில் இந்தியாவிலிருந்து ரிலையன்ஸ் நிறுவன தலைவர் முகேஷ் அம்பானி இடம் பிடித்துள்ளார்.

2022-ம் ஆண்டுக்கான உலகப் பணக்காரர்கள் பட்டியலை ஹூருன் நிறுவனம் மற்றும் எம்3எம் என்ற ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் இணைந்து வெளியிட்டன.

இதில் இந்தியாவின் முகேஷ் அம்பானி சுமார் ரூ.7.7 லட்சம் கோடி சொத்து மதிப்புடன் 9 ஆம் இடத்தை பிடித்துள்ளார்.

இந்தப் பட்டியலில் ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் டெஸ்லா நிறுவனர் எலான் மஸ்க் முதலிடத்திலும், அமேசான் தலைவர் ஜெப் பெசோஸ் இரண்டாமிடமும் பிடித்துள்ளனர். (நி-5)

## ஜப்பானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் இரண்டு பேர் உயிரிழப்பு 90 பேர் காயம்



(டோக்கியோ)

வடகிழக்கு ஜப்பானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் இரண்டு பேர் உயிரிழந்துள்ளதோடு, குறைந்தது 90 பேர் காயமடைந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

11 ஆண்டுகளுக்கு முன்பு புகுஷிமா அணுசக்தி பேரழிவைத் தூண்டிய பெரிய நிலநடுக்கம் ஏற்பட்ட அதே பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை 7.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. (நி-5)

## இஸ்ரேலில் புதிய உ

(ஜெருசலேம்)

இஸ்ரேலின் பென்குரியன் விமான நிலையத்திற்கு வந்த பயணிகளுக்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் புதிய வகை வைரஸ் மாறுபாடு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கடந்த 2019-ம் ஆண்டு இறுதியில் சீனாவில் உருவான கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவியது. பின்னர் கொரோனா வைரஸ் மரபணு மாற்றம் அடைந்து உருமாறியது.


தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, இந்தியா, நைஜீரியா உள்ளிட்ட நாடுகளில் உருமாறிய கொரோனா வைரஸ்கள் கண்டறியப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரை நிறுத்துங்கள்

## தச நீதிமன்றம் அதிரடி உத்தரவு!

**ற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கையை ுமாறு ரஷ்யாவுக்கு சர்வதேச நீதிமன்றம் அதிரடியாக**



ப் ற ட ரி ற க க்

கொண்ட சர்வதேச நீதிமன்றத்தில் நேற்று விசாரணை நடைபெற்றது.

இந்நிலையில், இந்த விசாரணையை தொடர்ந்து உக்ரைன் மீது நடத்தி வரும் இராணுவ நடவடிக்கையை ரஷ்யா உடனடியாக நிறுத்த வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் தற்போது அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது.

சர்வதேச நீதிமன்றின் இந்த உத்தரவை தொடர்ந்து உக்ரைன் மீது ரஷ்யா நடத்திவரும் தாக்குதல் நிறுத்தப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது. (நி-5)

## தப் பக்கம் நிற்க வேண்டும் என்பதை ா முடிவு செய்ய வேண்டும்

### எச்சரிக்கை

புடினுக்கு ஆதரவளிப்பது மிக மோசமான பின்விளைவுகளை உண்டாக்குவதற்கு ஆதரவு தருவதாகும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்ய இராணுவ நடவடிக்கைகளை செயற்படுத்தி வருவதன் காரணமாக சர்வதேச நாடுகள் ரஷ்யா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளன.

இந்நிலையில், ரஷ்யாவிடம் இருந்து இந்தியா சலுகை விலையில் கச்சாய் எண்ணெயை கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென்சாகி கருத்து வெளியிடுகையில், "உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை அனைத்து நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறோம்.

எனினும் சலுகை விலையில் ரஷ்யாவிடமிருந்து இந்தியா கச்சாய் எண்ணெய் வாங்குவது எங்களது பொருளாதாரத் தடைக்கு எதிரானது இல்லை.

இருந்தாலும் வரலாற்றில் எந்தப் பக்கம் நிற்க வேண்டும் என்பதை இந்தியா முடிவு செய்ய வேண்டும். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு ஆதரவளிப்பது, மிக மோசமான பின்விளைவுகளை உண்டாக்குவதற்கு ஆதரவு தருவதாகும்" எனத் தெரிவித்துள்ளார். (நி-5)

## உலக அழகிப் பட்டத்தை

### வென்றார் போலந்தின் கெரோலினா



(வர்ஷோ)

கொரோனா தொற்றுநோய் காரணமாக ஒத்தி வைக்கப்பட்ட கடந்த ஆண்டு உலக அழகிப் போட்டி தென்னமெரிக்காவின் போர்ட்டோ ரிக்கோவில் நடைபெற்றது.

2021 உலக அழகிப் பட்டத்தை போலந்தின் கெரோலினா பெலாவ்ஸ்கி வென்றுள்ளார்.

இதில் இரண்டாவது இடத்தை இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்கரான ஸ்ரீ ஷைனி பெற்றார். (நி)

## பொதுமக்கள் தஞ்சமடைந்த தியேட்டர் மீது உக்ரைனில் குண்டுத் தாக்குதல்



(கீவ்)

போர் தொடங்கி 3 வாரம் கடந்து விட்ட நிலையில் உக்ரைனின் தலைநகர் கீவ், கார்கிவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை ரஷ்ய படைகள் கைப்பற்ற முடியாமல் திணறி வருகின்றன.

உக்ரைன் மீது ரஷ்யாவின் போர் தாக்குதல் நேற்றுடன் 22 ஆவது நாளாக நீடிக்கிறது. தலைநகர் கீவ், கார்கீவ், மரியுபோல் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மீது தாக்குதல் கடுமையாக நடந்து வருகிறது.

துறைமுக நகரமான மரியு போலில் போர் தொடங்கிய நாளில் இருந்தே தாக்குதல் அதிகமாக இருந்து வருகிறது. உக்ரைனின் முக்கிய துறைமுக நகரமான மரியுபோலை உருக்குலைக்கும் வகையில் தொடர்ந்து குண்டுகளை வீசி வருகிறது.

மேலும் மரியுபோல் நகரில் இருந்து வெளியேறும் மக்களை ரஷ்ய படைகள் தடுத்து வருவதாக உக்ரைன் குற்றம் சாட்டி வரு கிறது. அந்நகரில் தவிக்கும் மக்கள் பதுங்கு குழியிலும், கட்டடங்களின் அடித்தளங்களிலும் தவித்தபடி உள்ளனர்.

இந்தநிலையில் மரியுபோல் நகரில் உள்ள சினிமா தியேட்டரில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் தஞ்சம் அடைந்து இருந்தனர். அந்த தியேட்டர் மீது ரஷ்யா குண்டுகள் வீசி தாக்குதல் நடத்தியதாக உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் தியேட்டர் முற்றிலும் சேதம் அடைந்து இருப்பதாகவும் அதில் பலர் சிக்கி இருப்பதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்த மக்களின் கதி என்ன என்பது குறித்து தகவல் இதுவரை வெளியாக வில்லை. (நி-5)

## உருமாறிய கொரோனா கண்டுபிடிப்பு

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தென் ஆபிரிக்காவில் புதிய வகை உருமாறிய கொரோனாவான ஒமிக்ரோன் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. மற்ற உருமாறிய கொரோனா வைரஸை விட ஒமிக்ரோன் மிகவும் வேகமாக பரவக்கூடியது என்று எச்சரிக்கப்பட்டது. அதன்படி ஒமிக்ரோன் வைரஸ் பல்வேறு நாடுகளில் பரவி பாதிப்பை ஏற்படுத்தியது.

இந்தநிலையில் இஸ்ரேலில் புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டு இருக்கிறது.

இந்த புதிய வகை உருமாறிய கொரோனா வைரஸ் 2 பேருக்கு கண்டறியப்பட்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்த மாறுபாடு இன்னும் உலகம் முழுவதும் கண்டறியப்படவில்லை என்று இஸ்ரேல் சுகாதார அமைச்சகம் தெரிவித்து உள்ளது.

இதற்கு முன்பு டெல்டா வகை மற்றும் ஒமிக்ரோன் வைரஸ் இணைந்து "டெல்டாக்ரான்" உருவானதுபோல் ஒமிக்ரோன் வைரஸின் துணை வகைகளான பி.ஏ.-1 மற்றும் பி.ஏ.-2 ஆகியவை இணைந்து புதிய வகை கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் நவீன தொழில்நுட்பத்தில் இறால் பண்ணை அமைக்கப்படுகிறது

(மன்னார்)

ஏற்றுமதி தொழில் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் நோக்கோடு தேசிய நீரியல் வளர்ப்பு அதிகார சபையின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கு அமைவாக பெருந்தோட்ட அமைச்சின் வேளாண்மைத் துறை, நவீனமயமாக்கல் திட்டம், மதிப்பு சங்கிலி வளர்ச்சி மானியம் மற்றும் வங்கிக் கடன் உதவிகளின் ஊடாக தனியார் ஒருவரினால் கொன்னையன் குடியிருப்பு பகுதியில் அதி நவீன தொழில்நுட்பத்தில் இறால் வளர்ப்பு பண்ணை அமைக்கப்பட்டு வருகின்றது.

வடமாகாணத்தில் முதல் தடவையாக குறித்த திட்டம் வெளிநாட்டு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் மன்னாரில் உருவாக்கப்பட்டு வரும் குறித்த இறால் பண்ணை சுமார் 28 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் குறித்த பண்ணையை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் பார்வையிட்டுள்ளார். நவீனமயப்படுத்த உடன் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு மேலதிக நடவடிக்கைகள் குறித்து திட்டம் தொடர்பாகவும் பண்ணை உரிமையாளரிடம் கேட்டு அறிந்து கொண்டார். (5)

# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் இன்று

(தருமபுரம்)

கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

மக்களின் பாதுகாப்புக் கடமைகளுக்காக சுமார் 200 இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

கடந்த இரண்டு வருட காலமாக கொரோனாத் தொற்று காரணமாக அடியார்கள் மட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே அனுமதிக்கப்பட்டனர்.

இம்முறை வழமை போன்று சிறப்பாக நடைபெறவுள்ளதன் காரணமாகவும் மக்களின் நலன், பாதுகாப்புக் கருதியும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம். சதுரங்க தெரிவித்துள்ளார். (5-6-316)




புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள Hirdaramani Clothing (PVT) LTD ஆடைத் தொழிற்சாலை நிர்வாகத்தினரின் ஏற்பாட்டில் சமூகத்திற்கான பங்களிப்பு எனும் தொனிப்பொருளில் நேற்று முல்லைத்தீவு கடற்கரை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது சேகரிக்கப்பட்ட குப்பை கூழங்கள் கரைதுறைப்பற்று பிரதேச சபையினரின் உதவியுடன் அப்புறப்படுத்தப்பட்டன. (படம்:- தவசீலன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 150 | 180 | 250 |
| உருளைக்கிழங்கு | 120 | 145 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 330 | 400 |
| தக்காளி | 180 | 160 | 200 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 90 | 80 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 200 | 280 | 280 | 350 |
| பூசணி | 80 | 100 | 100 | 100 |
| புடோல் | 250 | 150 | 180 | 150 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 180 | 150 | 100-250 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 140 | 200 |
| பாகற்காய் | 350 | 350 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 150 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 100 | 120 |
| பயற்றங்காய் | 200 | 200 | 160 | 250 |
| லீக்ஸ் | 140 | 150 | 160 | 200 |
| பீற்றூட் | 180 | 150 | 150 | 180 |
| கறிமிளகாய் | 250 | 200 | 200 | 300 |
| முருங்கைக்காய் | 1500 | 1000 | 1000 | 1200 |
| போஞ்சி | 250 | 200 | 250 | 350 |
| கத்தரிதம்புள்ள | 180 | 160 | -- | 240 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 120 | 150 | 140 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-90 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 180 | 180 |
| வெங்காயப்பூ | 140 | 140 | 140 | 320 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 70 | 30 | 40 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- |

# இரத்ததான முகாம்



(குப்பிழான்)

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் இரத்தான முகாம் நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் கோண்டாவில் தில்லையம்பதி மத்திய கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி இரத்ததான முகாமில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (5-6-18)



தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் தினமும் பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருள் கண்காட்சியும் விற்பனையும் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை சாவகச்சேரி யில் அமைந்துள்ள தென்மராட்சி பிரதேச செயலக வளாகத்தில் இடம் பெற்றது. (படம்:-விஜயவாசன்)


## அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வரைவுள்ளது)

## கிளைக்குழு தெரிவு தொடர்பான அறிவித்தல் 19.03.2022

அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் 13 கிளைகளுக்குமான கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபை கூட்டங்கள் எதிர்வரும் 19.03.2022 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கீழ் குறிப்பிட்டுள்ள விபரப்படி குறிப்பிடப்பட்ட இடங்களில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொண்டு சம்பந்தப்பட்டவர்களால் தகைமையுடைய உறுப்பினர்களின் தனிப்பட்ட முகவரிக்கு அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

| தொ இல | கிளை இல | கிளையின் பெயர் | தவிசாளர் பெயர் | கிளைப் பொதுச்சபைகூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | கூட்டுறவாளர் வீதி அளவெட்டி | திரு.சபாரத்தினம் அருள்நாதன் | சங்கத்தலைமைக் காரியாலய மண்டபம் கூட்டுறவாளர் வீதி |
| 2 | 2 | அலுக்கை அளவெட்டி | திரு.தங்கராசா கண்ணதாசன் | பிரதேசசபை நூலக மண்டபம் டச்சு வீதி அளவெட்டி |
| 3 | 3 | ஆலடி அளவெட்டி தெற்கு | திரு.சிங்கராசா சியாந்தன் | கிராமசேவையாளர் மண்டபம் அளவெட்டி மேற்கு J/220 |
| 4 | 4 | முதலியார் கோயிலடி | திரு.கந்தையா கமலநாதன் | முதலியவேள் முன்பள்ளி, அளவெட்டி வடக்கு |
| 5 | 5 | அளவெட்டி வடக்கு | திரு.கணேசராசா பரநிரூபன் | அளவெட்டி வடக்கு சனசமூக நிலையம் அளவெட்டி வடக்கு |
| 6 | 6 | கணேஸ்வரம் | திரு.நாகலிங்கம் குமணதாசன் | கிராம அபிவிருத்திச்சங்கம் கணேஸ்வரம் அளவெட்டி |
| 7 | 7 | அளவெட்டி தெற்கு | திரு.குணரத்தினம் நிசாந்தன் | முற்போக்கு சனசமூக நிலையம் அளவெட்டி தெற்கு |
| 8 | 8 | மல்லாகம் சந்தி | திரு.இராஜசிவம் தனுசன் | மல்லாகம் சந்தி சங்கக்கட்டடம் |
| 9 | 9 | கல்லாரை மல்லாகம் | திரு.வேதநாயகம் பிரதீஸ்குமார் | கிளை 9 இன் கட்டடம் கல்லாரை மல்லாகம் |
| 10 | 10 | குளமங்கால் மல்லாகம் | திரு.பாலச்சந்திரன் பாலரவி | ஆபிரகாம் சனசமூக நிலையம் குளமங்கால் மல்லாகம் |
| 11 | 11 | கலைநகர் அளவெட்டி தெற்கு | திரு.ஐயாத்துரை மயூரன் | கலைவாணி சனசமூக நிலையம் கலைநகர் அளவெட்டி தெற்கு |
| 12 | 12 | நீதிமன்ற வீதி மல்லாகம் | திரு.கணபதிப்பிள்ளை செந்தூரன் | சன்மார்க்க சனசமூக நிலையம் நீதிமன்ற வீதி மல்லாகம் |
| 13 | 9A | கே.கே.எஸ்.வீதி மல்லாகம் | திரு.ஜோசப் ஜெகதாஸ் | கிளை 9 இன் கட்டடம் கல்லாரை மல்லாகம் |

அழைப்புக் கடிதம் கிடைக்காத தகைமையுடைய உறுப்பினர்களும் இவ் அழைப்பிதழை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு கிளைப்பொதுச்சபை கூட்டத்திற்கு சமுகம் கொடுத்து கிளைக்குழுத் தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். (சி-3992)

செயலாளர்,
அளவெட்டி மல்லாகம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ து)
அளவெட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2022-13.04.2022



**நினைத்ததை நினைத்தவுடன் செய்து முடிக்க எண்ணும் சிம்ம இராசி வாசகர்களே!**




பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். பஞ்சம - அஷ்டமாதிபதியான குரு, உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே நினைத்து நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். தன-லாபாதிபதியான புதன் நீச்சம் பெற்று சூரியனுடன் இணைந்து 'புத-ஆதித்ய யோக'த்தை உருவாக்கும் இந்த நேரத்தில், கல்வி, கலை சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் இருந்த தொய்வு அகலும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு சில காரியங்களை முடித்துக்கொடுப்பர். கொடுக்கல்- வாங்கல் ஒழுங்காகும்.

**ராகு - கேது சஞ்சாரம்**

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசிக்கு ராகுவும், துலாம் இராசிக்கு கேதுவும் செல்கிறார்கள். 9 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் ஒளிமயமான எதிர்காலம் உருவாகும். நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். சொத்துக்களில் முறையான பங்கீடு கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி கைகூடும். 3 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதால், உடன் பிறப்புகள் வழியில் செலவு ஏற்படும். உறவினர் இல்ல சுபகாரியங்களை முன்னின்று நடத்துவீர்கள். வழக்குகள் சாதகமாகும்.

**மேஷ - புதன் சஞ்சாரம்**

## நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும்

பங்குனி 22 ஆம் திகதி, மேஷ இராசிக்கு புதன் செல்கிறார். உங்கள் இராசிக்கு தன-லாபாதிபதியாக விளங்கும் அவர், 9 ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்திற்கு வரும் பொழுது பொருளாதார நிலை உயரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். புனிதப் பயணம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் பதவி உயர்வு கிடைக்கலாம். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**கும்ப - செவ்வாய் சஞ்சாரம்**

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதுவரை சனியுடன் இணைந்து சஞ்சரித்து வந்த செவ்வாய், இப்பொழுது கும்ப இராசியில் உள்ள குருவுடன் இணைந்து உங்கள் இராசியைப் பார்க்கப்போகிறார். அதோடு 'குரு மங்கள யோகமும் ஏற்படுகிறது. இதனால் விட்டுப்போன வரன்கள் மீண்டும் வாசல் தேடி வரும்.

தொழில் முயற்சி வெற்றியாகும். இடம், பூமியால் இலாபம் உண்டு. வீடு வாங்குவது, கட்டுவதில் கவனம் செலுத்துவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் பொறுப்பு கிடைக்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் ஆதரவோடு எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்வீர்கள். பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கணவன் - மனைவிக்குள் பாசமும், நேசமும் அதிகரிக்கும். நல்ல மருத்துவம், நாட்பட்ட நோயைக் குணமாக்கும். உங்கள் பெயரிலேயே அசையாச் சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டு.

பிள்ளைகளின் திருமண முயற்சி கைகூடும். பணிபுரியும் பெண்களுக்கு கூடுதல் சம்பளம் தருவதாகச் சொல்லி, புதிய நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**எப்போதும் எதிர்காலம் பற்றிய சிந்தனையிலேயே இருக்கும் கன்னி இராசி வாசகர்களே!**




பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் புதன் சுகாதிபதி குருவுடன் சேர்ந்து 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் உண்டு. மகிழ்ச்சிக்குரிய தகவல்கள்

## மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரும்

வந்து சேரும்.

**மீன - புதன் சஞ்சாரம்**

பங்குனி 3 ஆம் திகதி மீன இராசிக்குச் செல்லும் புதன், அங்கு நீச்சம் பெறுகிறார். உங்கள் இராசிநாதன் நீச்சம் பெறுவதால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படத்தான் செய்யும். இருப்பினும் கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் என்பதால், பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும். சேமிப்பு கரைந்தாலும் புதிய வாய்ப்புகள் மூலம் வருமானம் வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், விருப்ப ஓய்வுபெற்றுக்கொண்டு சுயதொழில் செய்வது பற்றி சிந்திப்பார்கள்.

**ராகு-கேது சஞ்சாரம்**

பங்குனி 7 ஆம் திகதி, மேஷ இராசிக்கு ராகு செல்கிறார். இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்த ராகு பகவான், அஷ்டமத்திற்கு வருகிறார். அதே நேரம் கேதுவும் 3 ஆம் இடத்தில் இருந்து 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இந்த கிரகப்பெயர்ச்சிகள் அவ்வளவு நல்லதல்ல. கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. கொள்கைப் பிடிப்போடு செயற்பட முடியாது. பல இடையூறு வந்து சேரும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. ராகு-கேதுவிற்குரிய சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை, அனுகூல நாட்களில் செய்து வருவதால் நன்மைகளைப் பெறலாம்.

**மேஷ - புதன் சஞ்சாரம்**

பங்குனி 22 ஆம் திகதி, மேஷ இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு அதிபதி, அஷ்டமத்தில் சஞ்சரிக்கும்போது விரயங்கள் கூடும். வீடு மாற்றமும், இடமாற்றமும் ஏற்படும். உத்தியோகத்தில் கேட்ட சலுகைகளை மேலதிகாரிகள் வழங்க மறுப்பார்கள். என்னயிருந்தாலும் தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் கைவிடாதீர்கள். தொழில் செய்பவர்கள் பணியாளர்களிடமும், பங்குதாரர்களிடமும் கவனமாக இருங்கள்.

**கும்ப - செவ்வாய் சஞ்சாரம்**

பங்குனி 23 ஆம் திகதி, கும்ப இராசிக்கு செவ்வாய் செல்கிறார். இதன் விளைவாக 'விபரீத ராஜ யோகம்' செயற்படப் போகிறது. உங்கள் இராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது திட்டமிட்ட காரியங்கள் வெற்றியாகும். அசையாச் சொத்து வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்துசேரும். சரிந்து கிடந்த பொருளாதாரம் சகஜ நிலைக்கு திரும்பும். இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் லட்சுமிதேவி வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

**பெண்களுக்கான பலன்கள்**

இந்த மாதம் நினைத்தது நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். அனைத்து வகையிலும் யோகங்கள் வந்துசேரும். கணவன்-மனைவிக்குள் பிரச்சினைகள் தலைதூக்கினாலும் முடிவில் அமைதி கிடைக்கும். பிள்ளைகளின் வேலைவாய்ப்பு கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். பணிபுரியும் பெண்களுக்கு வீடு கட்ட, வாகனம் வாங்க சலுகைகள் கிடைக்கும். குருப் பெயர்ச்சிக்குப் பிறகு அனைத்து வழிகளிலும் யோகங்கள் ஏற்படும்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

### வேலு விரும்பியது!



(நேற்றைய தொடர்ச்சி)

அப்போது ஒலித் தம்பியை விட விகாரமாக இருந்த ஒருவன் அவர்களுக்கு குடிக்க நீர் கொண்டு வந்து கொடுத்தான்.

அப்போது அவன் வேலுவிடம் “உன் இடுப்பில் சொருகியுள்ள பணமுடிப்பின் முடிச்சு சற்று அவிழ்ந்திருக்கிறது. இன்னும் கொஞ்சத்தூரம் நடந்தால் அது மேலும் தளர்ந்து அதிலுள்ள பணம் கீழே விழுந்து விடும். ஜாக்கிரதை” என்று எச்சரித்தான்.

அதுகேட்டு வேலு தன் இடுப்பிலுள்ள பண முடிச்சைப் பார்த்தான். அதன் முடிச்சு தளர்ந்து தான் இருந்தது. துணியின் மறைவில் இருந்த பண முடிச்சு எப்படி அந்த மனிதனுக்குத் தெரிந்தது என்று வேலுவும் ஒலித்தம்பியும் ஆச்சரியப்பட்டார்கள். அம்மனிதனும் “நான் சொன்னது ஆச்சரியப்படும் படியாக இருக்கிறதா! நான் எதையும் எங்கிருந்தாலும் பார்க்க முடியும். என் பார்வையை எதுவும் தடை செய்ய முடியாது. என் பெயர் பேரொளி” என்றான்.

வேலுவும் நீயும் எங்களோடு தலைநகருக்கு வா. உன் பணி நாட்டிற்குத் தேவை” என்று விளக்க பேரொளியும் சம்மதித்து அவர்களோடு கிளம்பினான். மூவரும் சற்றுத் தூரம் சென்றதும் ஒரு குரல்... “நில்லுங்கள். ஒரு புலி வந்து கொண்டிருக்கிறது” என்றது. மறு நிமிடமே ஒரு புலி உறுமிக் கொண்டு அவர்களை நோக்கிப் பாய்ந்து வந்தது. அப்போது ஒரு பாறாங்கல் வேகமாக வந்து புலியைத் தாக்கி வீழ்த்தவே புலி துடிதுடித்து இறந்தது.


மூவரும் தலை நிமிர்ந்து பார்க்க ஒரு சிறிய மனிதன் பாறை மீது நின்று கொண்டிருந்தான். அவனா பாறாங்கல்லை எடுத்து எறிந்தவன் என்று அவர்கள் மூவரும் ஆச்சரியப் பட்டுக் கொண்டிருக்கையில் அந்த மனிதனே “என் பெயர் மகா சக்தி. நான்தான் என் கண்ணை அசைத்து பாறாங்கல்லைப் புலி மீது விழச் செய்தவன். என் கண் அசைவால் என்னால் எதையும் நகர்த்திக் குறியாகப் போட முடியும்” என்றான். அப்போது வேலு அவன் பணியும் நாட்டிற்குத் தேவை என்று விளக்கி அவனையும் தன்னோடு அழைத்துக் கொண்டான்.

நால்வரும் இருட்டும் வேளைக்கு ஒரு உயரமான மலையை அணுகினார்கள். மலை மீது பழைய கோட்டை ஒன்று இருந்தது.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## அயோத்தியா காண்டம்




நிலைமை மாறி விட்டது. அவள் அவல நிலை கண்டு கவலை கொண்டான் வேந்தன்; மானை எடுக்கும் யானையைப் போல அவளைத் தழுவி எடுத்தான்; அவள் நழுவி விழுந்தாள்; தரையில் தவழ்ந்தாள்; வானத்து மின்னல் தரையைத் தொட்டது; கட்டி அணைத்தான்; கொட்டிய தேளாகக் கடுகடுத்தாள் அவள்.

“தேனே என்றான்; மானே என்றான்; தெள்ளமுதே உன்னை எள்ளியது யார்?” என்றான்.

“மங்கை உதிர்த்த கண்ணீர், அவள் கொங்கையை நனைத்தது; முத்துமாலை உதிர்ந்ததுபோல் இருந்தது; அவன், தன் அங்கை கொண்டு கண்ணீரைத் துடைத்தான்; அவள் தலையில் அடித்துக் கொண்டு பதைத்தாள்; பார் பிளந்தது போன்று ஓர் நினைவு அவனுக்குத் தோன்றியது; “யார் உமக்குத் தீமை செய்தவர்?” என்று வினவினான்.

“நீர் வாய்மை மன்னன்; வாய் தவற மாட்டீர் என்று கருதுகிறேன்” என்றாள்.

“விரும்பியதைக் கேள், அரும்பியதைப் போன்ற உன் திருவாயால்; உள்ளம் உலோபேன்; வள்ளல் இராமன் மீது ஆணை” என்றான்.

“தேவர்களைச் சாட்சி வைத்தாய்; வரங்கள் இரண்டு தருவதாக மாட்சிபடக் கூறினாய்; அவற்றைத் தருக” என்றாள்.

“விளம்புக வழங்குகிறேன்” என்றான்.

“என் மகன் முடிசூட வேண்டும்; இது முதல் வரம்; இராமன் காடு ஏக வேண்டும்! இஃது அடுத்த வரம்” என்று தொடுத்துக் கூறினாள்.

நஞ்சு தீண்டியது; வேகம் அடங்கியது; யானை போலச் சுருண்டு விழுந்தான் வேந்தன். மருண்டு விழித்தான். மயக்கம் நீங்கினான்; தயக்கம் காட்டினான்.

“உன் சுய நினைவில் பேசுகிறாயா? மற்றவர் சொல்ல நீ கேட்கிறாயா?” என்று கேட்டான். “முடிந்தால் கொடு; இல்லாவிட்டால் விடு” என்றாள். சொற்கள் அவனுக்குத் துணை வரவில்லை, பற்களைக் கடித்துக் கொண்டான். அவன் தன் கைகளைப் புடைத்தான்; புழுங்கி விம்மினான்; அழுங்கி நைந்தான்; நெஞ்சு அழிந்து சோர்ந்தான்.

அவளைக் கொல்ல நினைத்தான்; அவள் சொல்லை வெறுத்தான்; “கேட்டது தருவது கேடு” என்பதை அறிந்தான்; எனினும் என் செய்வது? கொன்றால் பழி வந்து சேரும்; அதனால், அழிவுகள் மிகுதி, வேறு வழி இல்லை; ‘பணிவது தான் பயன்தரும்’ என நினைத்தான்.

“நீ கேட்கிறாய்; நான் மறுக்கவில்லை; உன் மகன் வேட்க மாட்டான்; அரியணையை ஏற்கமாட்டான்; உலகம் அதற்கு உறுதுணை நில்லாது; ஆட்சிதானே வேண்டும்? இராமனைக் கேட்டால் தம்பிக்கு மறுப்புக் கூறமாட்டான். அவனைக் கேட்பதா என்று நீ தயங்கலாம்; மண்ணைக் கேள்; தருகிறேன்; என் கண்ணைக் கேட்காதே; அதனை மறந்து விடு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டத்தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
- திருவாசகம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சிவனின் உதவி சிறை மீட்பது இந்தியாவின் உதவி சிறைப்படுத்துவது

அரிமர்த்தன பாண்டியனின் ஆட்சியில் அமைச்சராக இருந்தவர் மாணிக்கவாசகர்.

அரச பணத்தில் குதிரை வாங்குவதற்காகச் சென்ற அவர், தான் எடுத்துச் சென்ற பணத்தையெல்லாம் சிவனடியார் திருக்கூட்டத்துக்குச் செலவு செய்துவிட்டு, குதிரை வாங்காமல் அரண்மனைக்குத் திரும்பினார்.

அரச பணத்தை செலவழித்துவிட்ட செய்தியறிந்த பாண்டிய மன்னன், மாணிக்கவாசகரைச் சிறையில் அடைத்தான்.

தன் அடியவன் சிறைப்பட்டிருப்பது கண்ட சிவப்பரம்பொருள் வைகை நதியைப் பெருக்கெடுக்கச் செய்கிறார்.

வைகை நதி பெருக்கெடுத்து ஓடுகிறது.

நாட்டு மக்கள் அனைவரும் சேர்ந்து மண் அரண் அமைத்து பாதுகாக்குமாறு கட்டளையிடுகின்றான் மன்னன்.

மக்கள் எல்லோரும் தமக்குத் தமக்கு என ஒதுக்கப்பட்ட பகுதியில் அரண் கட்டுகின்றனர்.

செம்மனச்செல்வி என்ற மூதாட்டிக்கு யாருடைய உதவியும் இல்லை.

பிட்டு அவித்து விற்றுச் சீவியம் செய்கின்ற செம்மனச்செல்வி பாண்டிய நாட்டில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சோமசுந்தரப் பெருமானிடம் முறையிட, சிவப்பரம்பொருள் கூலியாளாக வந்து, செம்மனச்செல்வியிடம் உதிர்ந்த பிட்டை தனக்குரிய கூலியாகப் பெற்று அரண் கட்டும் வேலையில் ஈடுபட்டார்.

எனினும் அவரின் வேலை போதுமானதாக இல்லை. ஒரு கூடை மண்ணைப் போடுவதும் பின்னர் களைப்பாறுவதுமான நேரக் கடத்தல் நடக்கிறது.

இதனை அவதானித்த காவலர்கள் அரசனுக்கு முறையிட, மன்னன் கூலியாளுக்கு முதுகில் கசையடி கொடுத்தான்.

அந்தோ! என்னே ஆச்சரியம். கூலியாளுக்கு முதுகில் விழுந்த அடி உலகப் பிரபஞ்சம் அனைத்திலும் வீழ்ந்தது.

கூலியாளாக வந்தது சிவப்பரம்பொருள் என்பதை உணர்ந்த பாண்டிய மன்னன், மணிவாசகரை சிறையினின்றும் விடுவித்தார் என்பது புராணக்கதை.

சிறையில் அடைபட்ட மாணிக்கவாசகரை விடுவிக்க வந்த சிவன்; செம்மனச்செல்விக்குக் கூலியாளாக வந்து உதவியது எதற்காக? என்று கேட்டால், அங்குதான் சிவனின் இராஜ தந்திரநுட்பத்தின் தன்மை தெரியவரும்.

சிவனின் நோக்கம் சிறை மீட்பதாக இருந்தாலும் இல்லாதவர்க்கு உதவுவது போன்ற ஒரு காட்சி குறித்த நிகழ்வை நடத்தி முடிக்கக் கட்டாயமாகிறது.

இதைக்கூறும்போது சரி, இந்தப் புராணக் கதை எதற்காக? என்று நீங்கள் கேட்கலாம்.

இங்குதான் இலங்கைக்கான இந்தியாவின் உதவி பற்றி நாம் குறிப்பிட்டாக வேண்டும்.

ஆம், சீனாவுடன் உறவு பாராட்டிய இலங்கையை அதனின்றும் பிரித்தெடுத்து, தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் இலங்கையை வைத்திருக்க வேண்டும் என்பதுதான் இந்தியாவின் நோக்கம்.

அதற்குச் செம்மனச்செல்வி போல இலங்கையின் பொருளாதார வறுமை அமைய, அதனூடு இலங்கைக்கு உதவி செய்ய இந்தியா முன்வந்துள்ளது.

இந்தியாவின் இந்த உதவியை செம்மனச்செல்விக்கு சிவன் செய்த உதவியோடு ஒப்பிடும்போதுதான், சிவனின் உதவி மாணிக்கவாசகரை சிறைமீட்பது. இந்தியாவின் உதவி இலங்கையை சிறைப்படுத்துவது என்பதை உணர முடியும்.

## தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் 2021 ஆம் ஆண்டில் மானிய வேலைத் திட்டங்களை மேற்கொண்டதில் தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு மானிய காசோலை வழங்கும் நிகழ்வானது தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் உடுவில் பிரதேசத்திற்கான தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.சுலக்சனா மற்றும் உடுவில் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சந்திரகுமார் ஆகியோரும் இணைந்து உடுவில் கமநல சேவை நிலையத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியான காசோலைகள் 40 பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டதுடன் 400 மைற்றா பைக் கற்றுக்களும் பாக்கு மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் பிராந்திய முகாமையாளரினால் பயிர்ச்செய்கை தொடர்பாக ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு பதில்களும் வழங்கப்பட்டன.

மேலும் தேசிய தமிழர் சக்தி அமைப்பினரினால் பசுமை வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு பாக்கு மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில் சுன்னாகம் சந்தை, கந்தையா உபாத்தியார் சந்தி, கொத்தியாவத்தை, விளான், அரசடி சந்தி-சங்கானை, சங்கானை வைத்திய சாலை, சங்கானை சந்தை, நிச்சாமம், தொட்டிலடி, வல்லை வீதி-சங்கானை, இளவாலை வைத்தியசாலை, ஆலடி, இளவாலை, மாரீசன் கூடல், மெய்கண்டான், பெரியவிளான், சேந்தான் குளம்,சென்ட்ஜூட்- இளவாலை, ஜம்புகோளப்பட்டினம் ஒய்வு விடுதி, சில்லாலை முதி யோர் இல்லம், மாதகல், அரசடி, வடலியடைப்பு, இடும்பன், ஜம்புகோளப்பட்டினம், காஞ்சிபுரம், காட்டுப்புலம், குசுமாந் துறை, மாதகல் இறங்கு துறை, சாந்தை, சில்லாலை, வடலியடைப்பு, வைரவர் கோவிலடி-சுழிபுரம், திருமண மண்டபம் பிரான்பற்று, நாரந்தனை மத்தி, நாரந்தனை மேற்கு ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் கல்மடு நகர், பெரிய குளம், மீனவர்களின் கூட்டுறவுச் சங்கம் (கள்ளப்பாடு) ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## செய்தி வெள்ளம்

பலர் அன்று வரை அவர்கள் வாழ்ந்த முழு வாழ்க்கை ஒரு பக்கத்திலும், இந்த நிகழ்ச்சி மறுபக்கத்திலும் இருந்ததாக கூறினர். தங்கள் அனுபவப் பரிமாணம் அத்தகையது. கிரியாவைத் தொடர்ந்து எல்லோருக்கும் நல்ல மதிய உணவு வழங்க 60 மேசைகளை தொண்டர் குழு அமைத்திருந்தது பாராட்டுதலுக்குரியது.

அதே கிரிக்கெட் மைதானம்தான்; மாலையில் முற்றும் மாறியிருந்தது. குருஜி அமர்வதற்கென்று பெரிய தாமரை மலர் ஒன்று வடிவமைக்கப்பட்டிருந்தது. மைதானம் முழுவதும் வீடியோ திரைகள் இருந்தன. வெள்ளம்போல் மக்கள் திரண்டு வந்தது கண் கொள்ளாக் காட்சி, நிகழ்ச்சி [illegible] பரபரப்பு [illegible] (தொடரும்)

## மாணவர்கள் பயணித்த பேருந்து விபத்து 15 பேர் காயம்

வலஸ்முல்ல - ஹறந்துகல பகுதியில் ஹிங்குருவத்த பாலத்திற்கு அருகில் பாடசாலை மாணவர்கள் பயணித்த பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் குறித்த பேருந்தில் பயணித்த 15 மாணவர்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மாணவர்களை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் 4 மாணவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## கோவிட் தொற்று 3 பேர் மரணம்

நாட்டில் மேலும் 3 பேர் கொரோனா தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கோவிட் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16, 419 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## நாட்டில் இன்றைய தினமும் மின்வெட்டு அமுலாகும்

(கொழும்பு)

நாட்டில் இன்றைய தினமும் மின் துண்டிப்பை மேற்கொள்வது தொடர்பில் மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய, A,B,C, D, E,F,G,H,I,J,K,L ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு இன்று காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரையான காலப்பகுதியினுள் 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மாலை 6 மணி முதல் இரவு 11 மணிவரையான காலப்பகுதியினுள் ஒரு மணித்தியாலமும் 40 நிமிடங்களும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

அவ்வாறே P,Q,R,S, T,U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரையான காலப் பகுதியினுள் இரண்டு மணித்தியாலங்களும் மாலை 5 மணிமுதல் இரவு 10 மணிவரையான காலப்பகுதியினுள் ஒரு மணித்தியாலமும் 15 நிமிடங்களும் மின்வெட்டினை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ம)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

"வாசித்துக் காணாது என்பார்" என்பார் அருணகிரிநாதர்.

"அறிவாலறிந்துன் இருதாள் இளைஞ்சும்
அடியார் இடைஞ்சல் களைவோனே"
"அறிவையறிபவர் அறியும் இன்பந்தனை"

என்பவை அருணகிரி நாதரது அமுத வாக்கு. எனவே இறைவனை அனுபவ அறிவால் அறிய முயல்வதுவே அறிவுடைமை.

ஒரு பறவை இரு சிறகு களைக் கொண்டு பறப்பது போல்,இறை வழி

பாட்டிற்குப் பூவும் நீரும் வேண்டப்படுகின்றன.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு அருள்புரியா நிற்கும்"

என்பது திருமந்திரம். எங்கும் நிறைந்த இறைவனை, எங்கும் எளிதாகக் கிடைக்கக் கூடிய பூவினாலும், நீரினாலும் நாம் வழிபட வேண்டும். வழிபாட்டிற்கு அன்பும், ஆசாரமும் இரண்டு கண்கள் போன்றவை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 22

அட்டவணை (d7) இன மற்றும் மத அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு - கண்டி மாவட்டம்

| இனம் | எண்ணிக்கை | வீதம் | மதம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 1,023,488 | 74.4 | பௌத்தம் | 1,009,220 | 73.4 |
| இலங்கைத் தமிழர் | 69,210 | 5.0 | இந்து | 133,744 | 9,7 |
| இந்தியத் தமிழர் | 85,111 | 6.2 | இஸ்லாம் | 197,076 | 14.3 |
| இலங்கை முஸ்லிம் | 191,570 | 13.9 | உரோமன் கத்தோலிக்கம் | 22,379 | 1.6 |
| வேறு | 6,003 | 0.4 | ஏனைய கிருஸ்தவம் | 12,798 | 0.9 |
| | | | வேறு | 165 | - |
| மொத்தம் | 1,375,382 | | மொத்தம் | 1,375,382 | |

### கண்டி மாவட்டத்தின் மாகாண சபைத் தேர்தல் தொகுதிகளுக்கான எல்லை நிர்ணயம் (2017)

மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திற்கு 29 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப் பட்டனர். 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 A (2) இன் படி கண்டி மாவட்டம் 15 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத்தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.

கண்டி மாவட்டத்தில் 20 பிரதேச செயல கங்களுக்கு உட்பட்ட 1,188 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 1,375,382 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 91,692 ஆக நிர்ண யிக்கப்பட்டிருந்தது.

**மாகாண சபைத் தேர்தல் முதன்மைச் சட்டத்தின் படி தேர்தல் ஆணையாளரால், மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்திற்கு 29 மாகாண சபை உறுப்பினர்கள் நிர்ணயிக்கப்பட்டனர். இதன்படி கண்டி மாவட்டம் 15 மாகாண சபை உறுப்பினர்களை தெரிவு செய்யக்கூடிய வகையில் அத் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட வேண்டி இருந்தது.**

**கண்டி மாவட்டத்தில் 20 பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட 1,188 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் மொத்த சனத்தொகை 1,375,382 இல் இருந்து ஒற்றை அங்கத்தவர் தொகுதிக்கு உறுப்பினரை தெரிவு செய்வதற்கான சராசரி சனத்தொகை 91,692 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.**

கண்டி மாவட்ட செயலகத்தில் 22.11.2017 மாலை பொதுமக்களுடன் நடைபெற்ற கூட் டத்தில், பெற்றுக்கொள்ளப்பட்ட 23 பிரேர ணைகளுடன், பொதுமக்களிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கும்படி கேட்டுப் பெற்றுக்கொள்ளப்பட்ட 18 பிரேரணைகள் அடங்கலாக மொத்தம் 41 பரிந்துரைகளை குழு பெற்றுக் கொண்டது.

அதிகமான பிரேரணைகளின் பரிந்துரைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயம் செய்ய வேண்டிய முறை பற்றி கூறியிருந்தாலும் அவற்றுள் சில சரியான தகவல்களைத் தர வில்லை. அவற்றுள் பல பரிந்துரைகளில் பிரதேச செயலக பிரிவுகளின் எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லைகளையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவுகளை), உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் அடிப்படையாகக் கொண்டு எல்லை நிர்ணயம் இருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தன.

அவற்றில் சில பிரதேசங்களுக்கு பல் உறுப் பினர் தொகுதிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் மும்மொழிந்திருந்தன. மேலும் பரிந்துரைக்கப்பட்ட தொகுதிகளுக்கு இடையிலான சனத்தொகைச் செறிவு விகிதாசாரத்திற்கு ஏற்ப இல்லாமல் இருந்ததாலும், மேலும் பல ஆலோ சனைகள் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3(A) (4) (b) இன் நோக்கத்திற்கேற்ப அமையாத தாலும் ஏனைய பிரேரணைகள் போதுமான தகவல்களைக் கொண்டிராததாலும் இப் பிரேர ணைகளை குழுவால் கருத்தில் எடுக்க முடிய வில்லை.

அது மட்டுமன்றி அனைத்து மக்கள் தொகை தகவல்களும் நிர்வாகப் பிரிவு அடிப்படையில் மட்டுமே கிடைக்கப் பெற்றன. அதாவது, கிராம உத்தியோகத்தர் பிரிவுத் தகவல் மற்றும் பிரதேச செயலக பிரிவுத் தகவல் ஆகும். குழுவானது உள்ளூர் அதிகார சபை எல்லைகளையும் பழைய பாராளுமன்றத் தொகுதிகளின் எல்லை களையும் (தற்போதைய வாக்கெடுப்புப் பிரிவு களை) போன்றவற்றை விட பிரதேச செயல கங்களின் தகவல்களையே எல்லை நிர்ண யத்திற்கு அடிப்படையாக எடுத்துக்கொண்டது.

அதேநேரத்தில் நடைமுறை நோக்கங்களுக் காக தற்போது இருக்கும் ஏனைய தேர்தல் தொகுதிகளின் எல்லைகளைக் கூறு போடுவதை குறைப்பதற்கான தேவையை அறிந்து கொண்டது. எவ்வாறாயினும் சாத்தியமான வேளைகளில் குழுவானது முன்வைக்கப்பட்ட பிரேரணை முன்மொழிவுகளை முடியுமானவரை பிரதேச செயலகங்களைத் தேர்தல் தொகுதிகளுக்கு இணைக்கும் போது சேர்த்துக் கொண்டுள்ளது. இவை தவிர தேர்தல் தொகுதிகளின் சனத்தொகை எண்ணிக்கையில் ஒத்திசையாத தன்மையைக் குறைப்பதற்காக ஒத்துக்கொள்ளப்பட்ட சராசரி சனத்தொகையின் விலகலின் வரம்புகளுக் குட்பட்டதாகவும் 2017 ஆம் திருத்தச்சட்டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டுள்ளது.

பல பிரேரணைகள் பரிந்துரைத்ததாவது பல பல் அங்கத்தவர் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். ஏனெனில் சிறுபான்மையின (முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள்) சமூக விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்வதற் காகவே. இன்னும் சில பிரேரணைகள் குறிப்பாக தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் வாழும், குறிப்பிட்ட பிரதேசங்களை சுட்டிக்காட்டி இருந்தன.

முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 13.9% இலும் மற் றும் 11.2% இலும் உள்ளதை குழு அவதானித்தது. தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் போது பல் உறுப்பினர் தேர்தல் தொகுதிகளை உருவாக்கா மல் இந்த சமூகங்களின் சமநிலைப் பிரதிநிதித் துவத்தை பாதுகாக்கின்ற வகையில் பிரேரணை களை முடிந்த அளவு சேர்த்துக்கொள்ள தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

**முழு மாவட்ட சனத்தொகையிலும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் முறையே 13.9% இலும் மற்றும் 11.2% இலும் உள்ளதை குழு அவதானித்தது. அதேநேரத்தில் ஒரு உறுப்பினருக்கான சனத்தொகை வீதம் 6.6% ஆகும். இதன் பிரகாரம் இம் மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கு இரு தொகுதிகளும் தமிழ் மக்களுக்கு குறைந்தது ஒரு தொகுதியும் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் அது நடைமுறையில் சாத்தியப்படவில்லை. இருந்தாலும் சமூகங்களின் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கின்ற வகையில் முடிந்த அளவு தொகுதிகள் உருவாக்கப்பட்டன.**

**பல பிரேரணைகள் பரிந்துரைத்ததாவது பல பல் அங்கத்தவர் கொண்ட தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதே ஆகும். ஏனெனில் சிறுபான்மையின் (முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள்) சமூக விருப்பங்களை பிரதிநிதித்துவப்படுத்துவதை உறுதி செய்வதற்காகவே.**

மேலும் பல் உறுப்பினர் தேர்தல் தொகுதியில் பல்வேறு சமூகங்களின் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் வாய்ப்பினையும் அப்பரிந்துரைகள் மூலம் அறிய முடியவில்லை. எனவே இதனை இரட்டை அங்கத்தவர் தொகுதியாக எல்லை நிர்ண யம் செய்தாலும் எதிர்பார்க்கும் பிரதிபலனை மற் றைய இனத்தவர்கள் பெறுவது நடைமுறைச் சாத்தி யமற்றது. எனவே குழு 2017 ஆம் திருத்தச்சட் டம் பகுதி 3 (A) (4) (b) யும் கருத்திற் கொண்டு குறிப் பிட்ட தேர்தல் தொகுதிகளில் அந்தந்த சமூக விருப்பங்களை அந்த பிரதேசங்களில் பாதுகாக் கும் வகையில் நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது.

சில பிரேரணைகள் சிறுபான்மை இனத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதைப் பற்றி பரிந்துரை செய்திருந்தன. குறிப்பாக முஸ்லிம் மற்றும் தமிழ் தேர்தல் தொகுதிகளை உருவாக்கும் போது குழு வானது மேற்குறிப்பிட்ட பிரேரணைகளைக் கருத் திற்கொண்டுள்ளதோடு அனைத்து இனத்தவர்க ளினதும் சமநிலைப் பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கின்ற வகையிலும் எல்லைகள் நிர்ண யம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால் புரைக்கேறி...

சீலன் கிருத்திகா என்ற 8 மாத குழந்தையே மரணமடைந்துள்ளது.

நேற்று குழந்தைக்கு தாய்ப்பால் கொடுத்ததையடுத்து குழந்தை சோர்வுற்ற நிலையில் காணப்பட்டது.

இதனையடுத்து உடனடியாக குழந்தை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம)

## யானை தாக்கி...

பகுதியைச் சேர்ந்த சுதானந்தன் சுதா (வயது-46) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் கடந்த 13ஆம் திகதி மன்னார் அடம்பன் பகுதியில் யானைத் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம)

## எரிவாயு...

வெடித்துள்ளது.

வழமைபோன்று சமையல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை குறித்த எரிவாயு அடுப்பு வெடித்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதற்கமைய பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்கள். (ம)

## மகிந்த நாளை...

பௌத்த விகாரைகளில் பிரதமர் வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார்.

அதன்படி நாவற்குழி, ஆரியகுளம், கந்தரோடை, நயினாதீவு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைகளில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வழிபாடுகள் மேற்கொள்வார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

## முன்னாயத்தம்...

கவே உள்ளோம் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்னெடுக்கவுள்ள பேச்சுவார்த்தை தொடர்பில் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுக்கூட்டத்தின்போது சம்பந்தன் தெளிவுபடுத்தியிருந்தார்.

இதன்போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நடைபெறவிருந்த சந்திப்பில் கலந்துரையாட வேண்டிய விடயங்கள் குறித்து சம்பந்தன் கூட்டமைப்பின் உறுப்பினர்களிடத்தில் எடுத்துக்கூறியுள்ளார்.

இந்நிலையில் ஜனாதிபதியை சந்திக்க முன்னர் அவருடன் பேசவுள்ள விடயங்களை கடிதம் மூலம் தெரியப்படுத்தலாம். அதற்கு ஜனாதிபதி வழங்கும் பதிலைப் பொறுத்து ஜனாதிபதியை சந்திப்பதா? இல்லையா? என்பது குறித்து ஆராயலாம்.

எந்தவித முன் ஆயத்தமும் இல்லாது ஜனாதிபதியை சந்திப்பதில் அர்த்தமில்லை என ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடத்தில் வலியுறுத்தியுள்ள நிலையில், அது குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கருத்தினை தெரிவிக்கும் போதே சம்பந்தன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில் ஜனாதிபதியுடனோ அல்லது வேறு எந்த தரப்புடனும் எந்த நேரத்திலும் பேச்சுவார்த்தை நடத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தயாராகவே உள்ளது.

அரை நூற்றாண்டு காலமாக தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயங்களில் முழு மனதுடன் ஈடுபடும் கட்சியாக நாம் சகல சந்தர்ப்பங்களிலும் எமக்கு கிடைக்கும் வாய்ப்புகளை சரியாக பயன்படுத்திக் கொள்ளவே நினைக்கின்றோம்.

இலங்கையில் ஆட்சியில் இருந்த அரசாங்கங்களிடமும் சர்வதேசத்திடமும் தொடர்ச்சியாக எமது நிலைப்பாடுகளை சரியாக முன்வைத்து வந்துள்ளோம். இது தமிழர் தரப்புக்கும் நன்றாக தெரியும் என்றார். (ம)

## மொழிகளை...

யாழில் அண்மையில் இடம்பெற்ற அரசியல்வாதிகளை அணுகும் நிகழ்வில் பொதுமக்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு கொடுப்பவர் சொல்வது ஒன்று அங்கே எழுதப்படுவது வேறொன்றாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான நிலைமைகளால் குற்றவாளி தப்பித்துவிடும் நிலை காணப்படுகிறது. இது தொடர்பாக அரசிடம் தெரிவித்தபோது ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திற்கும் ஒரு மொழிபெயர்ப்பாளரை நியமிக்க நடவடிக்கை எடுத்திருந்தனர்.

அதிலும் சில மொழிபெயர்ப்பாளர்களுக்கு சரியாக தமிழ் தெரியாத நிலை உள்ளது. மொழி தெரியாத நிலைமை பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது.

இந்த நிலைமை பாராளுமன்றத்தில் கூட காணப்படுகிறது. இதனால் குழப்பங்கள் பல ஏற்படுகின்றன. இந்திய வம்சாவளி மக்கள் அதிகம் தமிழ், சிங்களம் தெரிந்தவர்களாக இருப்பார்கள். கொழும்பில் இருப்பவர்கள் மூன்று மொழிகளையும் தெரிந்து வைத்திருப்பார்கள். ஒரு மொழியை தெரிந்து வைத்திருப்பதால் எந்தப் பிரச்சினையும் ஏற்படப் போவதில்லை.

அவ்வாறு தெரிந்து வைத்திருந்தால் எமது மொழிக்காக குரல் கொடுக்க முடியும். ஆனால் இதனை சிலர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நாங்கள் மூன்று மொழிகளையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

சிங்களத்தை புறக்கணிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தொடங்கி இப்போது பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. நானும் அன்று அந்த பிழையை செய்திருந்தேன். ஆனால் அது சரியானதா என்பதனை சிந்திக்க வேண்டும். மொழிகளை அறிந்து வைத்திருக்க வேண்டும். அதுவே பிரச்சினைகள் பலவற்றை தீர்க்க வழிவகுக்கும் என்றார். (ம-30)

## அரசின் செல்...

மக்கள் மத்தியில் அரசுக்கான செல்வாக்கு நாளாந்தம் வீழ்ச்சியடைந்து வருகின்றது எனவும் தீவிர ஆதரவை வெளிப்படுத்தியவர்கள்கூட மாற்றுவழியை நாடுகின்றனர் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக தெரிகிறது.

அதேபோல் அரசு மீது மக்கள் அதிருப்தியில் இருப்பதால், ஐக்கிய மக்கள் சக்திக்கான ஆதரவு 17 வீதத்தால் அதிகரித்துள்ளது எனவும் புலனாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சரவையில் இருந்து விலக்கப்பட்டுள்ளதால், அரசின் வாக்கு வங்கிக்கு ஏற்படும் தாக்கம் பற்றி தற்போது ஒரு முடிவுக்கு வர முடியாது எனவும் மேற்படி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனத் தெரிய வருகின்றது. (ம)

## ஒரு...

பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நேற்றுக்கைச்சாத்திடப்பட்டதாக நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்றுள்ள நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ அசாதாரணமான பொருளாதார நெருக்கடியின் பிடியில் சிக்கியுள்ள இலங்கைக்கு மேலும் இந்தியாவின் உதவியை பெற்றுக் கொள்வது தொடர்பாக இந்திய பிரதமரை சந்தித்து நேற்று முன்தினம் கலந்துரையாடினார்.

இவ்வாறான நிலையிலேயே இலங்கைக்கு மேலும் ஒரு பில்லியன் டொலர்களை வழங்கும் ஒப்பந்தம் நேற்று கைச்சாத்தானது.

இலங்கையின் தற்போதைய எரிபொருள், எரிவாயு தட்டுப்பாடு, உணவு மற்றும் ஏனைய அடிப்படைப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் இந்தியாவிடம் இருந்து கிடைக்கும் மேலும் ஒரு பில்லியன் டொலர்கள் மூலம் கடும் நெருக்கடியில் இருந்து இலங்கை தற்காலிக நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கருதப்படுகிறது. (ம)

## ரூபவாஹினி...

எது.

பரமி நிலேப்னா ரணசிங்க என்பவரே உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை விமர்சித்து தனது தனிப்பட்ட முகநூல் கணக்கில் பதிவிட்டதற்காக அவரை ரூபவாஹினி பணி நீக்கம் செய்துள்ளது.

சமூக ஊடகங்களில் ஜனாதிபதி குறித்த பதிவே பணி நீக்கத்திற்கு காரணம் என பரமி நிலேப்னா ரணசிங்க உறுதிப்படுத்தியுள்ளார். (ம)

### மெகா பவர்

திகதி 17/03/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1057
U 06 | 19 22 37 70

### மஹஜன சம்பத

திகதி 2022/03/17
சீட்டிழுப்பு இலக்கம் 4709
M 4 7 6 0 3 7

### தன நிதானய

திகதி -2022.03.17
சீட்டிழுப்பு இலக்கம் - 739
C 32 54 71 80

### அத கோடிபதி

கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1512
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.03.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 2,713,260
வெற்றி இலக்கங்கள் 08 35 67 76 | ஆங்கில எழுத்து Y

### சனிதா

கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3847
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2022.03.17
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 2,503,920
வெற்றி இலக்கங்கள் 09 40 50 58 | G

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1686 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 17.03.2022 | தினம் வியாழன்
X 47 51 66 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,991,470/-

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,239,318/-
திகதி 17.03.2022
சீட்டிழுப்பு வாரம் 3398
வர்ணம் கபில நிறம்
வெற்றி இலக்கங்கள் 09 10 24 39 | விருச்சிகம்
6685487
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,376,660/-

### லக்ன வாசனாவ

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 02 13 24 28 50
சீட்டிழுப்பு வாரம் 862
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.03.17 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 222,891,979/-

### සංවර්ධන වාසනාව

திகதி: 2022-03-17
வெற்றி வாரம்: 494 | வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.14,514,464/-
K | 07 22 43 | 9
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,114,220/-
ரூ.14,596,184/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**DTPE Campus**

**Diploma in Sinhala**

சிங்களம் எழுத, வாசிக்க, கதைக்க சிங்கள டிப்ளோமா கற்கைநெறி

புதிய பிரிவுகள் ஆரம்பம்

கால எல்லை 6 மாதங்கள்

நேரம் : வார இறுதி நாட்கள் (காலை, மாலை வகுப்புக்கள்)

விசேட விலைக்கழிவில் 15,000/=

தவணைகளில் செலுத்தும் வசதி

விண்ணப்ப முடிவுத் திகதி : 27.03.2022

(10661)

N0.925, KKS Road, Thadatheru Junction, Jaffna.

021 468 0964
077 543 8036

# இலங்கை மக்களின் தேவைகளுக்கு இந்தியா தொடர்ந்து மதிப்பளிக்கும்

## இந்திய வெளிவிவகார அமைச்சர்



(டெல்லி)

இலங்கை மக்களின் தேவைகளுக்கும் நிலைப்பாடுகளுக்கும் இந்தியா தொடர்ந்து மதிப்பளித்து வருகிறது என இந்திய வெளியுறவு துறை அமைச்சர் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கரிற்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் இரவு புதுடெல்லியில் இடம்பெற்றது. இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இருதரப்பு பொருளாதார பங்காளித்துவம் குறித்து ஆக்கப்பூர்வமாக கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இலங்கை மக்களின் தேவைகளுக்கும் நிலைப்பாடுகளுக்கும் இந்தியா தொடர்ந்து மதிப்பளித்து வருகிறது என இந்திய வெளியுறவு துறை அமைச்சர் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சின் செயலாளர் ஹர்ஷ்வர்தன் ஸ்ரிங்காவிற்கும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையிலான சந்திப்பின்போது, கொவிட் தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கையின் பொருளாதார நிலைமை, கோவிட் பெருந்தொற்று கட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது.

அயலகத்திற்கு முன்னுரிமை என்ற கொள்கைக்கமைய இந்தியா இலங்கையுடன் ஒருங்கிணைந்து செயற்படும் அத்துடன் இந்தியா எப்போதும் இலங்கைக்கு நட்பு நாடாக இருக்கும் என இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (ம)

**தென்னிந்திய யாத்திரை**

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரி ஊடான யாத்திரை

நாட்கள் : 16. யாத்திரீகர் : 10

(C-3988)

மலைக்கோட்டை விநாயகர், ஆறுபடைவீடுகள், திருப்பதி, 9 நவக்கிரக ஆலயங்கள், குருவாயூர், மைசூர் சாமுண்டீஸ்வரி உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம்.

மேலும் விபரங்கட்கு — ஆரம்பம் :14.05.2022

T. ஸ்ரீ ரெங்கநாதன். மகன் ராஜன்

077 768 0102, 077 736 2154

**பணியாளர் தேவை**

காவலாளி, சுத்திகரிப்பாளர், பூந்தோட்டம் பராமரிப்பவர், Room Boy (அறை பராமரிப்பவர்) ஆகிய வேலையாட்கள் பிரபல நிறுவனத்திற்கு தேவைப்படுகின்றனர்.

(10682)

நேரில் சந்திக்கவும்

தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

077 601 6310
077 243 1310

இல. 76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.

## எரிவாயு...

எடுத்த வந்த கப்பலில் இருந்து எரிவாயுவை தரையிறக்கும் நடவடிக்கையை இன்று முதல் முன்னெடுக்கவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் இன்று முதல் மீண்டும் எரிவாயு விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. (ம)

**காணி விற்பனைக்கு**

யாழ். சுன்னாகம் கந்தரோடை வீதியில், ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கு முன்பாக College Road இல் 6 பரப்பு காணி 11 அடி தனிப் பாதையுடன் உடனடி விற்பனைக்கு உண்டு. உறுதி, 25 வருடத்திற்கு முற்பட்ட தோம்பு, சோலை வரி உட்பட அனைத்து ஆவணங்களுடன். தரகர்கள் தேவையில்லை. விபரங்களுக்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

(10666)

ரூபன் : 077 198 0768 செல்வன் : 077 230 6642, 071 520 6642

உரிமையாளர் :
திரு.சந்திரபோஸ் தமிழ்ச்செல்வன் JP(whole Island)
இல.242, டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

**மக்கள் வங்கி ஓய்வூதியர் சங்க (வடவலய) வருடாந்த பொதுக் கூட்டம் (20.03.2022)**

இடம் : திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையக மண்டபம் (எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக)

காலம் : 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி

மக்கள் வங்கி ஓய்வூதியர்கள் அனைவரையும் தவறாது வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். (10676)

தலைவர் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்கள்

## வாக்க...

நிலை ஏற்பட்டுள்ளதாக ஜேவிபி சுட்டிக்காட்டியுள்ளது.

ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றிய போது, ராஜபக்ச குடும்ப ஆட்சியானது குறிப்பிட்ட சில நபர்களுக்கு ஆறுதல் அளித்துள்ள அதேவேளை, பொதுமக்கள் வீதிக்கு இழுக்கப்பட்டுள்ளனர் என்றார். (ம)

உ
சிவமயம்

**3ஆம் ஆண்டு சிரார்த்த திதி நினைவஞ்சலி**

திதி - பங்குனி பூரணை

இன்று (18.03.2022) வெள்ளிக்கிழமை

**அமரர் கோபாலகிருஷ்ணன் திகம்பரேஸ்வரி**

*(சிதம்பரம்)*

நயினையில் : 22.11.1948

அம்பாளின் திருவடியில் : 21.03.2019



பெண்ணின் பெருந்தக்க
தாயாய் மண்ணில்
எம்மை நல்ல வண்ணம்
வாழ வைத்த அன்னையின்
ஆன்மா அம்பாளின்
திருவடிகளில் ஒன்றப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல் குடும்பத்தினர்
021 222 1341

இல. 30/12, சீனிவாசகம் வீதி,
தர்மலிங்கம் அவெனியு,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தில்லைவனபதி,
நயினாதீவு - 05

**காணி விற்பனைக்கு**

யாழ். கைதடி தெற்கில் விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் 12 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

- கைதடி சந்தியில் இருந்து 600 மீற்றர் தூரம்
- நல்ல சூழலில்
- கைதடி சந்தி பெற்றோல் நிரப்பு நிலையம் (ஏ9 வீதி ) அருகாமை வீதியில்

(10683)

074 291 3725
074 291 3726

**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3942)

0768226240 DHL

**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**

யாழ் நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சிற்றுண்டி உணவகத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.

(C-3995)



அனுபவம் அவசியமில்லை
பயிற்சி வழங்கப்படும்

சம்பளம் 20'000/-

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS

49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். 0777-068-777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.